உ

கடவுள் துணை

# சுகந்த பரிமள சாஸ்திரம்

நடராஜப்பத்து முதலிய தோத்திர நூல்களையும், மூலிகை மர்மம், கனக சாஸ்திரம், விஷ வைத்திய சிந்தாமணி முதலிய வைத்திய நூல்களையும், நவ கண்ட ஆரூடம், நஷ்ட ஜாதக கணிதம் முதலிய சோதிட நூல்களையும், சிவமகா மந்திரம், நவக்கிரக மகாமந்திரம், மலையாள மாந்திரீக போதினி முதலிய மந்திர நூல்களையும், நாரதர் கலகம், பிரபஞ்ச உற்பத்தி முதலிய சரித்திர நூல்களையும் இயற்றிய ஆசிரியரும்

ஆயுர்வேத வைத்தியருமான

சிறும்ணவூர் முனிசாமி முதலியார்

இயற்றியது

B. R. அரங்கசாமி நாயகர்

பதிப்பாளர் : : சென்னை

பதிப்புரிமை ] 1948 [ விலை ரூபா 1.

வாகீஸ்வரி அச்சு நிலையம்,
சென்னை :—1948.

# உள்ளடக்கம்


| விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| புஷ்பங்கள் முகர்த்தல் முதலியவற்றால் பேதியாகும் முறைகள் | .... | .... | 1 |
| மூக்குத் தூள் | .... | .... | 15 |
| பரிமளப் பொடிகள் | .... | .... | 17 |
| அத்தர் பில்லைகள் | .... | .... | 23 |
| ஊது வர்த்திகள் | .... | .... | 29 |
| பரிமள எண்ணெய்கள் | .... | .... | 36 |
| சந்தனாதித் தைலங்கள் | .... | .... | 44 |
| தைலங்கள் | .... | .... | 49 |
| ஷர்பத்துகள் | .... | .... | 52 |
| எஸ்ஸென்ஸ் வகைகள் | .... | .... | 63 |
| பல்பொடி வகைகள் | .... | .... | 70 |
| கர்ப்பூரம் | .... | .... | 72 |
| கப்பு எண்ணெய்கள் | .... | .... | 74 |
| பஸ்பங்கள் | .... | .... | 77 |
| சுக ஜன்னிக்குப் பிரம்மாஸ்திரப் பொடி | | .... | 78 |
| தேள் விஷத்திற்கு | .... | .... | 79 |
| பாம்பு விஷத்திற்கு | .... | .... | 82 |
| ஆரோக்கிய ரக்ஷகம் | .... | .... | 84 |

உ

கடவுள் துணை

# சுகந்த பரிமள சாஸ்திரம்

## மல்லிகைப் புஷ்பத்தை முகர்ந்தால் பேதியாகும் முறை

| | | |
|---|---|---|
| இரசம் | வராகனெடை | 2 |
| வெள்ளைக் காட்டாமணக்குப் பருப்பு | ,, | 3 |
| சிற்றாமணக்குப் பருப்பு | ,, | 4 |
| நெல்லிக்காய்க் கெந்தகம் | ,, | 5 |
| நேர்வாளப் பருப்பு | ,, | 6 |

நேர்வாளத்தை மாத்திரம் சாணியில் கரைத்துக் கொதிக்கவைத்து எடுத்து மேலோட்டைத் தட்டி விட்டு உள்ளேயிருக்கும் முளையை நீக்கியபின் மேற்கண்ட 6-வராகனெடை நிறுத்தெடுத்து மற்ற சரக்குகளையும் சேர்த்துக் கலுவத்திலிட்டுத் தேங் காய்ப்பால் விட்டு மைபோல் அரைத்துக் கொண்டு வேறொரு தேங்காயைக் குடுமி நீக்கிக் கண்ணைத் திறந்து தண்ணீரைக் கொட்டிவிட்டு அதற்குள் அரைத்த மருந்தை அடைத்துச் சந்து வாய்க்கு ஆப்

படைத்துக் குப்பை யெருவின்கீழ் ஒரு முழ ஆழத்தில் புதைத்து வைத்து எட்டாம் நாள் எடுத்து மேலோட்டை மாத்திரம் நீக்கிவிட்டு அந்தத் தேங்காயும் உள்ளேயிருக்கும் மருந்தையும் கலுவத்திலிட்டு மைபோலரைத்து அந்தக் கலுவத்திலேயே ஒரு புறமாக அணைத்து வெயிலில் வைத்தால் தைலமிறங்கும். அந்தத் தைலத்தைப் புட்டியில் அடக்கம் செய்து வைத்துக்கொள்ளவும்.

பேதிகை வேண்டியவர்கள் ஒரு குச்சியினல் தைலத்தைத் தொட்டு மல்லிகைப் புஷ்பத்தில் தடவி முகர்ந்துகொண் டிருந்தால் பேதியாகும். பகலில் மோர் சாதம் சாப்பிடவேண்டியது. பேதி நிறுத்த வேண்டுமானல் சந்தனத்தை வயிற்றிலும் மார்பிலும் பூசிக்கொண்டால் நின்றுவிடும்.

## வேறு விதம்

| | | |
|---|---|---|
| இரசம் | வராகனெடை | 1 |
| நெல்லிக்காய்க் கெந்தகம் | ,, | 1 |
| வெங்காரம் | ,, | 1 |
| வாளம் | ,, | 5 |
| ஆமணக்குப் பருப்பு | ,, | 6 |
| கார்போகரிசி | ,, | 7 |
| புரசம் விதை | ,, | 8 |
| கடுக்காய்த் தோல் | ,, | 9 |
| சிவதை வேர் | ,, | 10 |
| புங்கம் பருப்பு | ,, | 11 |

இவைகளைக் கொடிக்கள்ளிப்பால் விட்டு மூன்று நாள் அரைத்து ஒரு தேங்காயின் கண்ணைத் திறந்து தண்ணீரைக் கொட்டிவிட்டு அதற்குள் இந்த மருந்தை யடைத்துச் சந்து வாய்க்கு ஆப் படைத்து 15-நாள் வரையிலும் நெல்லுக்குள் மூடி வைத்து 16-ஆவது நாள் எடுத்து மேலோட்டை மாத்திரம் நீக்கிவிட்டு அந்தத் தேங்காயையும் மருந் தையும் கலுவத்திலிட் டரைக்கவும். பதம் வரா விடில் இன்னொரு தேங்காய் கொண்டு வந்து கீற்று களாக எடுத்து நெருப்பில் சுட்டு இடித்துப் பிழிந்த பால் விட்டு மைபோ லரைத்துப் பீங்கானில் ஒரு புறம் அணைத்து வெயிலில் வைத்தால் தைலமிறங் கும். அந்தத் தைலத்தை மல்லிகைச் செண்டில் தடவி முகர்ந்தால் பேதியாகும். பேதி நிறுத்த வேண்டுமானால் சந்தனம் அரைத்து வயிறு முதல் மார்பளவும் பூசிக்கொண்டால் நின்றுவிடும். பகலில் மோர் சாதம் புளிப்பு ஊறுகாய் இவை யாகும்.

---

## லவங்கந் தின்றால் பேதியாகும் முறை

கள்ளி மரத்தை துளைத்து அதற்குள் லவங்கந் தேவையான வரையில் வைத்து மேல் மூடி, ஒரு பட்சம் சென்றெடுத்து நிழலில் உலர்த்திச் சீசாவில் வைத்துக் கொள்ளவும். வேண்டியபோது தாம் பூலம் போட்டுக்கொண்டு அதனுடன் ஒரு லவங் கத்தைத் தின்றால் 1-அல்லது 2-விசை பேதியாகும். வாய்வுகள் கலையும். வெந்நீரில் ஸ்நானஞ்செய்து மோர் சாதம் சாப்பிடவும்.

---

## அலரிப் புஷ்பத்தை முகர்ந்தால் பேதியாகும் முறை

வெள்ளைக் குங்கிலியத்தை முழுக்கடலை யளவு துண்டுகளாகச் செய்து ஒரு பலம் எடுத்துக் கொண்டு கள்ளிமரத்தைச் சதுரமாகக் கீண்டு மேல் புரணி யெடுத்து வைத்துக்கொண்டு உள்ளே துளை செய்து அதனுள் குங்கிலியப் பொடியைச் செலுத்தி மேல்புரணி யடைத்துச் சந்தில்லாமல் சாணி பூசி விட்டு 15-நாட்கள் பொறுத் தெடுத்துப் பீங்கான் தட்டில் போட்டு ஒரு நாள் காற்றுறியபின் கலு வத்தில் மைபோல் பொடிசெய்து வெத்துக்கொள் ளவும். வேண்டியபோது கரி நெருப்பின்மீது குங்கிலியப் பொடியைத் தூவி அந்தப் புகையை அலரிப் புஷ்பச்செண்டில் பிடித்துக்கொண்டு முகர்ந் தால் பேதியாகும். மோர் சாதம், பருப்புக் குழம்பு, மாமிசச் சூப்பு இவை சாப்பிடலாம்.

---

## திரியை முகர்ந்தால் பேதியாகும் முறை

ஆடுதின்னுப்பாளை, உள்ளி, வசம்பு இம் மூன் றும் சேர்த்தரைத்துத் துணியிற் பூசித் திரியாய்த் திரித்து முகரப் பேதியாகும். மோர் சாதம் புசிக்கவும்.

---

## ரோஜா புஷ்பத்தை முகர்ந்தால் பேதியாகும் முறை

இரண்டரைப் பலம் நேர்வாளக் கொட்டைகளை யுடைத்து மேலோட்டையும் உள்ளே யிருக்கும் முளையையும் நீக்கிவிட்டு எருமைப்பால் விட்டு மைபோலரைத்து 1-படி எருமைப் பாலில் கலந்து காய்ச்சிப் புரை குத்திக் கடைந்து வெண்ணெ யெடுத்து உருக்கி அந்த நெய்யை ரோஜா புஷ்பத்தில் தடவி முகர்ந்தால் பேதியாகும். மோர் சாதம் புசிக்கவும். வயிற்றுக்குச் சந்தனம் பூசப் பேதி நிற்கும்.

---

### வேறு விதம்

அழிஞ்சிற் கொட்டையும், வாளக்கொட்டையும் சரியெடை யெடுத்து மேலோடுகளைத் தட்டிவிட்டு உரலில் போட்டு ஒன்றிரண்டாய் நறுக்கிப் பாண்டத்திலிட்டுக் குழித்தைலம் இறக்கிச் சீசாவில் வைத்துக்கொள்ளவும். ஒரு பீங்கான் தட்டில் 4, 5, துளி தைலம் விட்டு ரோஜா புஷ்பத்தில் ஒத்திக்கொண்டு முகர்ந்தால் பேதியாகும். மோர் சாதம் சாப்பிடவும். வயிற்றுக்குச் சந்தனம் பூசினல் பேதி நிற்கும்.

---

## செவ்வலரிப் புஷ்பத்தை முகர்ந்தால் பேதியாகும் முறை

| | | |
|---|---|---|
| முனை நீக்கிய வாளப்பருப்பு | படி | 1 |
| அழிஞ்சிற் பருப்பு | படி | 1 |

இவ்விரண்டும் பஞ்சுபோல் சிதைத்துக் கலுவத்தி விட்டுத் தண்ணீர் விட்டு மைபோல் அரைத்து 3 அல்லது 4 படி தண்ணீரில் கரைத்து அடுப்பேற்றிக் காய்ச்சினுல் தைலம் மிதக்கும். அதாவது, தண்ணீர் முக்கால் பாகம் சுண்டுகிற வரையில் எரித்துக்கொண்டிருந்தால் முத்துக்கொட்டையில் வருவதுபோல் வாளத் தைலம் மேலே மிதக்கும். அதை வழித்துச் சீசாவில் வைத்துக்கொண்டு வேண்டியபோது செவ்வலரிப் புஷ்பச் செண்டில் தடவி இராத்திரி பனியில் வைத்துக் காலையில் எடுத்து முகர்ந்தால் பேதியாகும். குளிர்ந்த ஜலத்தில் குளித்துச் சந்தனம் பூசிக்கொண்டால் பேதி நின்றுவிடும். கறிசூப்பு, மோர்சாதம் சாப்பிடலாம்.

---

## எந்தப் புஷ்பத்தை முகர்ந்தாலும் பேதியாகும் முறை

| | | |
|---|---|---|
| புரசம் விதை | வராகனெடை | 2 |
| வெள்ளைக் காக்கண விதை | ,, | 2 |
| காட்டாமணக்கம் விதை | ,, | 2 |
| வாளம் | ,, | 3 |
| வெங்காரம் | ,, | 1 |

| | | |
|---|---|---|
| பாதரசம் | வராகனெடை | 1 |
| நெல்லிக்காய்க் கந்தி | ,, | 1 |

இவைகளைக் கள்ளிப்பால் விட்டு மூன்று நாள் வரையில் அரைக்கவும். பால் சுவரிப்போனல் தேவையான வரையில் விட்டு அரைத்து அப்படியே ஆறவைத்துப் பதத்தில்எடுத்து மாத்திரைகள்செய்து வைத்துக்கொள்ளவும். வேண்டியபோது ஒரு மாத்திரையை இளநீர்விட்டுக் குழைத்துப் பீங்கானில் விட்டுக் கொண்டு அதை எந்தப் புஷ்பத்திலாவது ஒத்திக்கொண்டு முகர்ந்தால் பேதியாகும். குளிர்ந்த ஜலத்தில் குளித்து மோர்சாதம் சாப்பிடவும். உடம்பில் சந்தனம் பூசிக்கொண்டால் பேதி நிற்கும்.

---

## தொப்புளில் தடவினல் பேதியாகும் முறை

| | | |
|---|---|---|
| இரசம் | வராகனெடை | 1 |
| நெல்லிக்காய்க் கந்தி | ,, | 1 |
| வாளம் | ,, | 3 |
| அழிஞ்சிற் பருப்பு | ,, | 4 |
| வெங்காரம் | ,, | 5 |
| சிற்றாமணக்குப் பருப்பு | ,, | 6 |
| காட்டாமணக்குப் பருப்பு | ,, | 8 |
| கடுக்காய்த்தோல் | ,, | 9 |
| கலியாண முருக்கம் பருப்பு | ,, | 10 |

இவைகளைக் கொம்புக்கள்ளிப்பால் விட்டு மூன்று நாட்களரைத்து ஒரு தேங்காய்க்குள் ளடைத்துப் பதினைந்து நாள் தானிய புடம் வைத் தெடுத்துச் சிரட்டை நீக்கி மற்ற யாவும் அரைத்து வெண்கலப் பாத்திரத்தி லணைத்துச் சூரியபுடம் வைக்கத் தைல மிறங்கும். அந்தத் தைலத்தில் அணுப்பிரமாணம் தொட்டுத் தொப்புளில் தடவினால் பேதியாகும். குளிர்ந்த ஜலத்தில் குளித்து மோர் சாதம் சாப்பிடவும். சந்தனத்தைத் தொப்புளில் பூசினால் பேதி நிற்கும்.

---

## தாம்பூலந் தின்றால் பேதியாகும் முறை

திருகு கள்ளி மரத்தின் வேரின் மீதிருக்கும் பட்டையைக் கொண்டுவந்து துண்டு துண்டுகளாக நறுக்கிப் பாண்டத்திலிட்டு அது முழுகும்படி ஆவின் பால் விட்டு அடுப்பேற்றி ஒரு ஆவி வரும்படி அவித்தெடுத்து நல்ல ஜலத்தில் அலம்பி நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு தாம்பூலம் அருந்தும்போது அத் துடன் சுமார் கால் வாரகனெடைக்கு அதிகப் படாமல் போட்டுக்கொண்டு அமிர்தத்தை விழுங் கினால் நன்றாய் விரோசனமாகும். சந்தனத்தைத் தேகத்தில் பூசிக்கொண்டால் பேதி நிற்கும். இந்தப் பேதியினால் மலபந்தம் வாயு இவை நீங்கும்.

---

## உள்ளங்காலில் தடவினால் பேதியாகும் முறை

வெள்ளைக்காக்கணம் விதை
வெள்ளைக்காட்டாமணக்கு விதை
புரசம் விதை
வெங்காரம்
நேர்வாளம்
இரசம்
கந்தகம்

இந்த ஏழு வகையும் சரியெடையாய்க் கூட்டிக் கலுவத்திலிட்டுக் கள்ளிப்பால் விட்டு மூன்று நாட்கள் வரையில் செம்மையாய் அரைத்துக் குன்றிமணி யளவுக்கு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில் வைத்துக்கொள்ளவும். வேண்டியபோது ஒரு மாத்திரை யெடுத்து இள நீரில் இழைத்து உள்ளங்காலில் தடவினால் 10 - தடவை பேதியாகும்.

## காப்பித்தண்ணீரில் அல்லது நீராகாரத்தில் பேதியாகும் முறை

| | | |
|---|---|---|
| இந்துப்பு | பலம் | ¼ |
| வளையலுப்பு | ,, | ¼ |
| கரியுப்பு | ,, | ¼ |
| பொட்டிலுப்பு | ,, | ¼ |
| உவருப்பு | ,, | ¼ |
| சுத்தி செய்த வாளம் | ,, | 2½ |

இவைகள் யாவும் கலுவத்திலிட்டு மைபோல் அரைத்து நன்ருய்த் தேர்ந்த 4-தேங்காயைத் திருகி அந்தப் பூவில் ஊடி மருந்தைக் கலந்து பிசரிப் பிட்டவியல் போல் அவித்துப் பிழிந்த பாலே இரும்புக் கடாயில் விட்டு அடுப்பேற்றிக் காய்ச்சித் தைல பதம் வந்தவுடன் இறக்கி வடிகட்டிச் சீசாவில் வைத்துக் கொள்ளவும். நீராகாரத்திலாவது காப்பித் தண்ணீரிலாவது 4, 5, 6 துளிவரையில் விட்டுச் சாப்பிட ஆரோக்கிய பேதியாம். சுரக்கட்டி முதலியன கரையும்; பெண்கள் தூரகாலத்தி லுண்டாகும் வயிற்றுவலி தீரும். இச்சாபத்தியம்.

---

## பொடிக் கிருமிகள் விழுவதற்கு மாம்பருப்புப் பேதி

அரை வராகனெடை மாம்பருப்பைப் பொடித்து வெல்லத்தில் பொதிந்து கொடுக்கப் பொடிக் கிருமிகள் விழும்.

---

## எலுமிச்சம்பழத்தை முகர்ந்தால் பேதியாகும் முறை

| | | |
|---|---|---|
| சிற்றாமணக்கம் பருப்பு | வராகனெடை | 5 |
| காட்டாமணக்கம் பருப்பு | ,, | 5 |
| கொன்றைப்பழத்தின் பருப்பு | ,, | 8 |
| முருக்கம்பருப்பு | ,, | 8 |
| கடுக்காய்த்தோல் | ,, | 8 |
| வாளம் | ,, | 4 |
| அழிஞ்சில் விதை | ,, | 4 |
| வெங்காரம் | ,, | 4 |
| இரசம் | ,, | 1 |
| கந்தம் | ,, | 1 |

இவைகளைப் பஞ்சுபோல் இடித்துக் கல்வத்தி விட்டுக் கள்ளிப்பால் விட்டரைக்கவும். அவ்வப் போது பால் விட்டு மூன்று நாள் வரையிலும் அரைத்துத் தேங்காய்க்குள் அடைத்து 14-நாள் வரையில் தானிய புடம் வைத்தெடுத்து மேலோட் டை நீக்கித் தேங்காயுடன் கலுவத்தி லரைத்துக் கடும் வெயிலில் வைக்கத் தைலமிறங்கும். அந்தத் தைலத்தை நன்ருய்க் கசக்கிய எலுமிச்சம்பழத்தில் தடவிச் சற்றுநேரம் பொறுத்துக் கையில் வைத்துக் கொண்டு முகர்ந்துகொண்டே யிருந்தால் பேதி யாகும். நாபியில் சந்தனம் பூசப் பேதி நிற்கும். மோரன்னம் புசிக்கவும்.

## குழந்தைகட்குத் தித்திப்புப் பேதி

| | | |
|---|---|---|
| ரஸ்தாளி வாழைப்பழம் | | 10 |
| திராட்சைப்பழம் | பலம் | 5 |
| பசுநெய் | ,, | 2 |
| புதிய தேன் | ,, | 5 |
| சுத்தி செய்த வாளம் | ,, | 5 |
| ஓமம், சுக்கு, மிளகு வகைக்கு | ,, | 1 |
| கடுகுரோகணி | ,, | 3 |

இவைகளெல்லாம் கலுவத்திலிட்டு நான்கு சாமமரைத்து வழித்துக் கல் ஜாடியில் போட்டுக் காற்றுப் புகாமல் மூடி வைத்துக்கொள்ளவும். மருந்தைக் கண்டால் அழுகிற குழந்தைகட்கு இதில் காசளவு எடுத்து அப்பம், தோசை இவைகளில் தடவிக் கொடுத்தால் பிரியமாய்த் தின்னும். இளைப்பில்லாமல் சுகபேதியாகும். பேதி அதிகமானால் வசம்பைச் சுட்டு இளநீரிலுரைத்துக் கொடுத்தாலும், மோர் விட்டுக் கரைத்த சுடுகஞ்சி கொடுத்தாலும் நிற்கும்.

சில வைத்தியர் கொடுக்கிற முரட்டுப் பேதிகைகள் நாள்முழுதும் விடாமல் ஆகிறதுண்டு. அப்படித் தீராத பேதிக்கு ஒரு வரட்டியைப் பொடியாய் இடித்து ஒரு படி ஜலத்தில் போட்டு அடுப்பேற்றி ஆழாக்குக் கியாழமாகச் சுண்டும்படி காய்ச்சி இறக்கி வடிகட்டி அதில் ஒரு எலுமிச்சம்பழம் பிழிந்து காலணா எடை பழுப்புச்சர்க்கரை போட்டுக் கலந்து மணிநேரத்திற் கொருவிசையாக இரண்டு தடவை கொடுத்தால் எப்படிப்பட்ட பேதியும் நின்றுவிடும்.

---

## வாழைப்பழத்தில் பேதியாகும் முறை

| | | |
|---|---|---|
| இரசகற்பூரம் | பலம் | 1/4 |
| திராட்சைப்பழம் | ,, | 1/2 |
| சுத்திசெய்த வாளம் | ,, | 3/4 |

இவைகளைக் கலுவத்திலிட்டு யாவும் ஒன்று பட மெழுகு பதமா யரைத்துக் குன்றிமணிபோல் மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும். வாழைப்பழத்தில் 1, 2 மாத்திரை கள் வைத்து மூடிச் சாப்பிடப் பேதியாகும். நல்ல வெல்லத்திலும் சாப்பிடலாம். ஆட்டுக்கறி, சூப்பு, மரக்கறிகள் யாவும் சாப்பிடலாம். பேதி அதிக மானல் புளிப்பு ஊறுகாய் தொட்டுக்கொண்டு மோர் சாதம் தின்றால் நின்றுவிடும்.

---

## மிளகு நீரில் பேதியாகும் முறை

உடம்பு திமிராகவும், வயிறு மந்தமாகவும், மலச்சிக்கலாகவு மிருந்து பேதிகை சாப்பிட வேண்டுமென்கிற பிரியமிருக்கும் பட்சத்தில், அன் றையதினம் சமையல்காரியிடம் சொல்லி மிளகுநீர் ரசம் கூட்டும்போது அத்துடன் பத்து மிதிபாக விலை போட்டுக் காய்ச்சும்படிச் சொல்லி வழக்கம் போல் போஜனத்தில் அந்த ரசம் விட்டுக்கொண்டு சாப்பிட்டால் இரண்டொரு விசை மலங்கழியும்; தேகம் ஆரோக்கியமா யிருக்கும்.

---

## நாக்குப்பூச்சிகள் விழுவதற்குக் கடுக்காய்ப் பேதி

சூரத்துக் கடுக்காய்களைத் தட்டி விதை நீக்கி மேற்றோலை மாத்திரம் 1-பலம் நிறுத்தெடுத்துக் கொள்ளவும். தேறின பிரண்டை கொண்டுவந்து கணுக்களை நீக்கி நடுப்பாகங்களைச் சிறு துண்டுகளாய் வெட்டி 1-பலம் நிறுத்தெடுத்துக் கொள்ளவும். இந்த இரண்டு சரக்குகளையும் கலுவத்திலிட்டுத் தண்ணீர் விட்டு மைபோலரைத்துச் சுண்டைக்காயளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திச் சீசாவில் வைத்துக்கொள்ளவும். தேவையான போது இரவில் படுக்கும்போது தேகதிடமறிந்து 1-அல்லது 2-மாத்திரைகள் பொடித்துக் கொஞ்சம் சர்க்கரை கலந்து சாப்பிடவும். காலையில் எழுந்தவுடன் 1-பலம் சிற்றாமணக்கெண்ணெய் சாப்பிட்டால் 2-3-தடவை மலந்தள்ளும். நாக்குப் பூச்சிகள், திமிர்ப்பூச்சிகள் விழும்.

---

## பொடிக் கிருமிகள் விழுவதற்குப் புரசவிதைப் பேதி

ஆண் புரசவிதை 2-கொண்டுவந்து எருமைச் சாணியில் பொதிந்து வைத்துக் காலையில் எடுத்து மேல் தோலை நீக்கிவிட்டுப் பசுப்பால் விட்டரைத்துக் கொடுக்க வயிற்றிலுள்ள பொடிக்கிருமிகள் கூட்டோடு விழும்.

---

# மூக்குத்தூள்

## சுகந்த மூக்குத்தூள் செய்யும் முறை

| | | |
|---|---|---|
| நெருப்பிலிட்டுப் பொரித்தெடுத்த படிகாரத்தூள் | வராகனெடை | 1 |
| மெந்தால் | ,, | ¾ |
| பச்சைக் கற்பூரம் | ,, | ½ |
| ஸ்மெல்லிங் சால்ட் | ,, | ½ |
| சந்தன அத்தர் | ,, | 1 |

முதல் நான்கு சரக்குகளும் கலுவத்திலிட்டுச் சந்தன அத்தர் விட்டு அரைத்து அதன்பிறகு ஒருசேர் மூக்குத்தூள் போட்டு நன்றாய்க்கலக்கும்படி அரைத்து எடுத்துக் காற்றுப் புகாமல் புட்டிகளிற் பத்திரப் படுத்திக்கொள்ளவும். சாதாரண மூக்குத்தூள் காலணு பொடியில் இந்தச் சுகந்த மூக்குத்தூள் ஒரு சிட்டிக்கை கலந்துகொண்டால் தகுந்த காரமும் பரிமளமும் வீசும்.

---

## ஆக்கிராணப் பொடி

| | | |
|---|---|---|
| சுண்டைவேர் | பலம் | 1 |
| தும்பைவேர் | ,, | 1 |
| இலுப்பைக்கட்டி | ,, | 1 |

இலுப்பைக் கட்டியை மாத்திரம் சுட்டுக் கொண்டு இருவகை வேரும் வெயிலில் உலர்த்தி யாவும் ஒன்றாயிடித்து வஸ்திரகாயம் செய்து

சீசாவில் வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு சிட்டிகை யெடுத்துமூக்குத்தூள் போடுவதுபோல் முகர்ந்தால் 5, 6 தும்மல் வரும் சிரசில் நீர் தங்கும் வியாதிகள் தீரும். தலைப்பாரம் மூக்கடைப்பு நீங்கும்; பத்தியமில்லை.

---

## வாழைப்பழ மூக்குத்தூள்

| | | |
|---|---|---|
| உயர்ந்த புகையிலைப்பொடி | சேர் | 1 |
| ஸ்மெல்லிங் சால்ட் | அவுன்சு | ½ |
| சம்மார்கப் | ,, | 1 |

முதலில் ஸ்மெல்லிங் சால்ட் என்பதைக் கலுவத்திலிட்டுக் கொஞ்சம் பொடியைப் போட்டு அரைத்துக்கொண்டபின் மற்ற பொடியும் போட்டுச் சம்மார்கப் என்னும் வாழைப்பழ வாசனை எஸன்ஸை விட்டு நன்ருய்க் கலக்க அரைத்துக் கொண்டு கல்கார்க்குச் சீசாவில் போட்டுக் காற்றுப் புகாமல் வைத்துக் கொள்ளவும்.

---

## மல்லிகைப்பூ மூக்குத்தூள்

மேற்கண்ட எடை பிரகாரம் பொடியும், ஸ்மெல்லிங் சால்ட்டும் கூட்டி யரைத்துக்கொண்டு மல்லிகைப்பூ எஸன்ஸ் ஒருடிராம் கலந்து காற்றுப் படாமல் புட்டியில் அடைத்துக்கொள்ளவும்.

---

# பரிமளப் பொடிகள்

## ஜெகன்மோகன சுகந்த ஸ்நானப் பொடி

| | பலம் | | பலம் |
|---|---|---|---|
| லவங்கம் | $1\frac{1}{8}$ | சீமைக்கிச்சிலிக்கிழங்கு | 3 |
| லவங்கப்பட்டை | $1\frac{1}{2}$ | லவங்கப்பத்திரி | 4 |
| கவுளா | ,, | ஜடாமாஞ்சில் | 6 |
| வாசனைப்புல் | ,, | மகிழம்பூ | 6 |
| கோஷ்டம் | $2\frac{1}{4}$ | ரோஜாப்பூ | 6 |
| பனப்ஷா வேர் | ,, | கொட்டிச்சாந்து | 9 |
| நாட்டுகிச்சிலிக்கிழங்கு | ,, | நெய்யில் வறுத்த நகம் | $\frac{3}{4}$ |
| வெட்டிவேர் | 3 | கஸ்தூரி மஞ்சள் | $\frac{3}{4}$ |
| ஏலக்காய் | 3 | சர்க்கரை | 9 |
| பச்சிலை | 3 | | |

இவைகளை இடித்துத் தூள் செய்த பிறகு சர்க்கரை சேர்க்கவும். இதில் கொஞ்சம் எடுத்துச் சம்பங்கி எண்ணெய் விட்டுக் குழைத்துச் சுவாகு அத்தர் கொஞ்சம் விட்டுக் குழப்பி, உடம்பில் பூசித் தேய்த்து ஸ்நானஞ் செய்துவந்தால் வியர்வை நாற்றம், கற்றாழை நாற்றம், அழுக்குத் தேமல் யாவும் நீங்கும். தேகம் மினுமினுக்கும்; அழகு அடையும்; பரிமளம் வீசும்; மனதுக்கு ஆரோக்கிய மாகும்; வசீகர முண்டாகும்.

## சுகந்த ஸ்நானப் பொடி

| | பலம் | | பலம் |
|---|---|---|---|
| சந்தனத்தூள் | 5 | ஏலரிசி | 2½ |
| சாம்பிராணித்தூள் | 5 | கோஸ்டம் | ,, |
| வெட்டிவேர் | 2½ | சோம்பு | ,, |
| விலாமிச்சம்வேர் | ,, | சடாமாஞ்சில் | ,, |
| கோரைக் கிழங்கு | ,, | கார்போகரிசி | ,, |
| கிச்சிலிக் கிழங்கு | ,, | தம்ராஸ்டம் | ,, |
| கஸ்தூரி மஞ்சள் | ¾ | பச்சைப்பயறு | ,, |

இவைகளை இடித்துத் தூளாக்கிச் சீசாவில் வைத்துக்கொள்ளவும். ஸ்நானம் செய்யும்போது கொஞ்சம் எடுத்துப் பாலிலாவது தண்ணீரிலாவது சேர்த்துத் தேய்த்துக்கொண்டு குளிக்கலாம். தினவு, சொரி, வியர்வைக்குரு, கற்றாழை நாற்றம் முதலியவை யுண்டாகா; மேனி சிவக்கும்; அழகுண்டாகும்.

---

## சுகந்த சிக்சாப் பொடி

குலாப்பூ, சோம்பு, கிளியூரல்பட்டை, அன்னாசிப்பூ, கவுளா, கிச்சிலிக் கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கோரைக்கிழங்கு, ஜடாமாஞ்சில், ஏலம், ஏலக்காய், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, லவங்கம், லவங்கப்பத்திரி, தாளிசபத்திரி, கல்பாசி, பச்சையிலை, கொட்டிச்சாந்து, கோஷ்டம், மகிழம்பூ, வெட்பாலையரிசி, கார்போகரிசி, மருக்கொழுந்து, மருவு, பளிங்கு சாம்பிராணி, சந்தனக்

கட்டை, அகிற்கட்டை, சிறுநாகப்பூ, பச்சைப் பயறு, கோதுமை, கசகசா இவைகளைச் சரியெடை வாங்கி இடித்து வஸ்திரகாயம் செய்து ஸ்நானம் செய்யும்போது உபயோகப்படுத்தவும்.

---

## சுகந்த கதம்பப் பொடி

| | பலம் | | பலம் |
|---|---|---|---|
| கொட்டிச்சாந்து | 2 | கோஷ்டம் | ½ |
| லவங்கப்பத்திரி | 2 | கார்போகரிசி | ,, |
| கிளியூரல்பட்டை | ½ | தனியா (வறுத்தது) | ,, |
| தாளிசபத்திரி | ,, | வெட்டிவேர் | ,, |
| குலாப்பூ | ,, | சோம்பு | ,, |
| கல்பாசி | ,, | ஏலம் | ,, |
| சடாமாஞ்சி | ,, | லவங்கம் | ,, |
| கிச்சிலிக்கிழங்கு | ,, | லவங்கப்பட்டை | ,, |
| பச்சையிலை | ,, | கவுளா | ,, |
| கஸ்தூரி மஞ்சள் | 2½ | தவனம் | 1 |
| அன்னாசிப்பூ | ,, | சந்தனத்தூள் | ½ |
| சண்பகப்பூ | 1 | | |

இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொள்ளவும். குளிக்கும்போது உபயோகப்படுத்தி வந்தால் சர்ம வியாதிகள் அணுகா; தேகாரோக்கிய முண்டாகும்.

---

## தசாங்கம்

சந்தனத் தூள், அகிற்கட்டைத் தூள், ஜாதிக்காய், ஜடாமாஞ்சில், மைசாட்சி, பளிங்கு சாம்பிராணி, லவங்கம், லவங்கப்பட்டை, ஏலம், காட்டெருமைப் பால் இவைகளைக் கலுவத்தில் பொடித்துக் கூட்டிக் கலந்து சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

---

## சுகந்த கூந்தல் தூபம்

| | | |
|---|---|---|
| சந்தனத்தூள் | பலம் | 1 |
| சாம்பிராணித் தூள் | ,, | 1 |
| சிலா ரசம் | ,, | 5 |

சந்தனத் தூளும் சாம்பிராணித் தூளும் கலுவத்திலிட்டு முன்னதாகக் கலந்துகொண்டு அதன் பிறகு சிலா ரசம் என்பதைப்போட்டு நன்ருய்க் கலக்கும்படி பிசைய வேண்டியது. பிறகு சீசாவில் வைத்துக் கொண்டு தலை முழுகினவுடன் துவட்டிக் கொண்டு படை நெருப்பின்மீது கொஞ்சம் தூவிக் கூந்தலுக்குப் பிடிப்பதிஞல் சீதளம், வாதசீதளம் யாவும் நீங்கி மனதிற்கும் தேகத்திற்கும் மிகவும் ஆரோக்கியமா யிருக்கும். ஜன்னி முதலியவைகள் அணுகா.

---

## சுகந்த கலவைப் பொடி

| | பலம் | | பலம் |
|---|---|---|---|
| லவங்கம் | ½ | மால்கிங்கிணி | 1 |
| மஸ்தகி | ¼ | லவங்கப்பட்டை | ½ |
| அன்னாசிப்பூ | ¾ | குலாப்பூ | 1 |
| கற்கண்டு | ½ | பளிங்கு சாம்பிராணி | 1 |
| ஜாதிக்காய் | ¼ | சிலாரசம் | 2½ |
| அகர் | 1 | கிச்சிலிக்கிழங்கு | ¾ |
| கோரைக் கிழங்கு | ¾ | அகிற்கட்டை | 1 |
| ஏலக்காய் | ⅛ | கவுளா | ½ |
| ஜாதிபத்திரி | ¼ | சம்பங்கி மொக்கு | ¼ |
| தேவதாரி சக்கை | ½ | அரக்கு | ¼ |
| கர்ப்பூரம் | ⅛ | சந்தனத்தூள் | 10 |

இவைகளை இடித்துத் தூள் செய்து வைத்துக் கொண்டு பழுப்புச் சர்க்கரை 3-அல்லது 4-பலம் எடுத்துத் தகுந்த தண்ணீர்விட்டு அடுப்பேற்றிப் பாகுசெய்து அதில் மேற்படி தூளைப் போட்டுக் கிளறி சூடாயிருக்கும்போதே கெச்சைக் காய் களைப்போல் உருண்டை செய்து பீங்கானில்வைத்து ஆறியபின் சீசாவில் வைத்துக்கொள்ளவும். பெண் கள் புருடர்கள் ஸ்நானம் செய்தபின் கூந்தலுக்கு இதைத் தூபம் போட்டால் அதிக பரிமளமாயும் இன்பமாயு மிருக்கும்.

## மகா சுகந்த கூந்தல் தூபம்

| | பலம் | | பலம் |
|---|---|---|---|
| பளிங்குசாம்பிராணி | $2\frac{1}{2}$ | தும்மராஸ்டகம் | $\frac{1}{2}$ |
| சந்தனத் தூள் | 5 | லவங்கப்பத்திரி | $\frac{1}{2}$ |
| கொட்டிச் சாந்து | 1 | நெரியரிசிப்பால் | 1 |
| அகிற் கட்டை | 1 | மட்டுப்பால் | 1 |

இவைகள் யாவும் கல்லுரலிலிட்டு ஒன்றுபடப் பொடியாகச் செய்து வைத்துக்கொண்டு வேண்டிய போது நெருப்பிலிட்டுக் கூந்தலுக்குப் பிடிக்க, மன உற்சாகமும், ஆரோக்கியமும், ஆனந்தமு முண்டாகும். துர்வியாதிகள், தொத்து வியாதிகள் அணுகா.

---

## அஷ்ட கந்தக் கூட்டு

ஜாதிக்காய், ஜடாமாஞ்சில், சந்தனத்தூள், அகிற் கட்டைத்தூள், ஏலம், லவங்கம் வகைக்குப் பலம் அரை; குங்குமப்பூ வராகனெடை 1; பச்சைக் கர்ப்பூரம் வராகனெடை 1; இவைகளைக் கலுவத்தில் பொடித்துக் கூட்டிச் சீசாவில் வைத்துக் கொண்டு கூந்தலுக்குத் தூபம்போட, நறும்மணம் வீசும்; மனமும் உற்சாக மடையும்.

---

# அத்தர் பில்லைகள்

## புதுக்கோட்டை சமஸ்தானம் அத்தர் பில்லை

| | வராகனெடை | | வராகனெடை |
|---|---|---|---|
| செவ்வல்லிக்கொடி | $1\frac{1}{2}$ | பூலாக்கிழங்கு | $1\frac{3}{4}$ |
| சண்பகப்பூ | 3 | சின்னலவங்கப்பட்டை | 1 |
| லவங்கப்பத்திரி | $1\frac{1}{4}$ | சிறுநாகப்பட்டை | $1\frac{1}{2}$ |
| சடாமாஞ்சில் | $1\frac{1}{2}$ | பெரியலவங்கப்பட்டை | 2 |
| கருவாப்பட்டை | $1\frac{1}{2}$ | வாய்விளங்கம் | $\frac{3}{4}$ |
| நன்னாரிவேர் | $1\frac{1}{2}$ | அதிமதுரம் | $1\frac{1}{4}$ |
| ஜாதிபத்திரி | $1\frac{1}{2}$ | பாலில் வேகவைத்த மரமஞ்சள் | $1\frac{1}{4}$ |
| கிளியூரல்பட்டை | $1\frac{1}{2}$ | மாவிலிங்கப்பட்டை | $\frac{3}{4}$ |
| தாளிசபத்திரி | $3\frac{1}{4}$ | காசா ஏலம் | 2 |
| சமுத்திரப்பச்சை | $3\frac{1}{4}$ | கோஷ்டம் | 4 |
| விலாமிச்சம்வேர் | 1 | | |

மேற்கண்டவைகளை நெய்யில் வறுத்து இடிக்க வேண்டியது.

மணலில் வறுத்த கசகசா வராகனெடை $\frac{3}{4}$
மணலில் வறுத்த நாகணம் ,, $1\frac{3}{4}$

பில்லைகள் வர்த்திகளில் வரும் சரக்குகளில் வறுக்கவேண்டியவைகளை இளம்பதமாக வறுக்கவும். சூரணிக்கும்போது துணிகளில் வடிகட்டி மைபோல் தூள் செய்து அரைக்கவேண்டியது.

| வராகனெடை | | | வராகனெடை |
|---|---|---|---|
| வெட்டிவேர் | 1 | சதகுப்பி | $1\frac{3}{4}$ |
| மகிழம்பூ | 2 | தேவதாரி | $1\frac{1}{4}$ |
| கல்பாசி | $1\frac{1}{4}$ | மல்லிகை | $2\frac{1}{2}$ |
| ஜாதிக்காய் | $1\frac{1}{2}$ | பளிங்கு சாம்பிராணி | $1\frac{1}{2}$ |
| கவுளா | $1\frac{1}{2}$ | பூஞ்சாந்து | $1\frac{1}{4}$ |

இவைகளை உலர்த்தி யிடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு ஒரு நாள் வெயிலில் வைத்து மறு நாள் எடுத்துப் பன்னீர் 2-புட்டி விட்டு முன் மருந் தும் சேர்த்து அரைத்து அதன் பிறகு,

| துலாம் | | | வராகனெடை |
|---|---|---|---|
| குலாப் அத்தர் | $1\frac{3}{4}$ | ஜவ்வாது | 3 |
| சுவாகு அத்தர் | 3 | சப்ஜா ரசத்தில் | |
| மட்டுப்பால் | $2\frac{1}{2}$ | வறுத்த உரம் | $\frac{3}{4}$ |
| சாம்பிராணித் தைலம் | 2 | பச்சைக் கர்ப்பூரம் | 2 |
| வராகனெடை | | குங்குமப்பூ | 4 |
| புனுகு | 5 | கோரோஜனம் | $1\frac{1}{2}$ |
| புனுகு சட்டம் | 3 | கஸ்தூரி | வீசம் |

முதலில் உரம் என்பதைக் கலுவத்திலிட்டு அரைத்து மற்ற அத்தர் முதலான யாவும் சேர்த்து முன்பு பன்னீரிலரைத்த சூரணத்தைப் போட்டு அரைத்துப் பில்லைகள்செய்து வைத்துக் கொள்ள வும்.

## மைசூர் அத்தர் பில்லை

| | வராகனெடை | | வராகனெடை |
|---|---|---|---|
| சின்னலவங்கப்பட்டை | 1 | லவங்கம் | 1 |
| சோம்பு | 1 | சிறுநாகப்பூ | 1 |
| கவுளா | 1 | நாகணம் | $1\frac{1}{4}$ |

இந்த ஆறும் நெய்யில் வறுத்துச் சேர்த்துக் கொண்டு,

| | வராகனெடை | | வராகனெடை |
|---|---|---|---|
| பூலாக்கிழங்கு | 1 | குட்டிவிளா | 1 |
| கிளியூரல்பட்டை | 1 | கோரந்து | 1 |
| சிற்றரத்தை | 1 | மருவு | 1 |
| துணிக்கந்தல் | 2 | சம்பங்கிமொக்கு | 1 |
| கல்பாசி | 1 | அன்னுசிப்பூ | 1 |
| குறுவேர் | $1\frac{1}{2}$ | சடாமாஞ்சில் | 1 |
| நிம்மதுளசி | 1 | கோஷ்டம் | $1\frac{1}{2}$ |
| கஞ்சாங்கோரை | 1 | மட்டுப்பால் | $2\frac{1}{2}$ |
| பாரிஜாதம் | 1 | ஜாதிபத்திரி | $\frac{3}{4}$ |
| செந்தாழம்பூ | 1 | அகிற்சந்தனம் | $\frac{1}{2}$ |
| பச்சிலை | $1\frac{1}{2}$ | புனுகு | 3 |
| கொட்டிச்சாந்து | $1\frac{1}{2}$ | சவ்வாது | 1 |
| வெட்டிவேர் | 2 | பச்சைக் கர்ப்பூரம் | 1 |
| ஜாதிக்காய் | $\frac{3}{4}$ | கஸ்தூரி | $\frac{3}{4}$ |
| திருநீற்றுப்பச்சை | 1 | கோரோசனம் | $\frac{1}{4}$ |

இவைகள் யாவும் இடித்து மெல்லிய சீலையில் வஸ்திரகாயம் செய்து, பன்னீரில் பிசைந்து ஊறப்

போட்டு 2-நாட்கள் கழித்து எடுத்து, பசுநெய் கொஞ்சம் விட்டு அரைத்து அதில் சந்தனம், பச்சைக் கர்ப்பூரம், கோரோசனம், கஸ்தூரி இவைகள் சேர்த்தரைத்துப் பின்பு ஜவ்வாது புனுகு கூட்டி அரைத்துப் பில்லை செய்யவும்.

---

## பெங்களூர் அத்தர் பில்லை

| | துலாம் | | துலாம் |
|---|---|---|---|
| கோஷ்டம் | ¼ | தாளிசபத்திரி | ½ |
| கிச்சிலிக்கிழங்கு | ¾ | பச்சிலை | 1 |
| ஜாதிக்காய் | ¾ | குலாப்பூ | 1 |
| சடாமாஞ்சில் | 1 | மகிழம்பூ | ½ |
| பாரிஜாதப்பூ | ½ | கவுளா | 1 |
| வெட்டிவேர் | ,, | அன்னுசிப்பூ | ,, |
| குறுவேர் | ,, | சம்பங்கிப்பூ | ¼ |
| தவனம் | 1 | ஏலரிசி | ¼ |
| மருவு | 1 | கிளியூரல்பட்டை | 1 |
| அகிற்கட்டை | 4 | லவங்கம் | ¾ |
| | | நகம் | ½ |
| இந்த 10 தினுசும் உலர்த்தி பிடித்து வஸ்திரகாயம் செய்யவேண்டியது. | | இந்த 11-தினுசும்நெய்யில் பொரித்து இடித்துத் தூள்செய்யவேண்டியது | |

இவ்விரண்டு தூள்களையும் கலுவத்தில் போட்டுக் கலந்து சிலாரசம் அரைத் துலாம் போட்டு அரைத்து, அதன் பிறகு ஒரு புட்டி பன்னீர் விட்டு அரைத்து, அதன் பிறகு,

| | | |
|---|---|---|
| பச்சைக் கர்ப்பூரம் | துலாம் | $\frac{1}{4}$ |
| குங்குமப்பூ | ,, | $\frac{1}{2}$ |
| புனுகு | ,, | $\frac{3}{4}$ |
| ஜவ்வாது | ,, | $\frac{3}{4}$ |
| சந்தன எண்ணெய் | ,, | 3 |

முன்னர் பச்சைக் கர்ப்பூரம், குங்குமப்பூ போட்டரைத்துப் பின் புனுகு ஜவ்வாது போட்டு அரைத்துக் கடைசியில் சந்தன எண்ணெய்விட்டரைத்துப் பில்லைசெய்து வெற்றிலைமேல் வைத்து நிழலில் உலர்த்திப் பதத்தில் எடுத்துக்கொள்ளவும்.

---

## வதனகாந்தி பில்லை

| | பலம் |
|---|---|
| உலர்ந்த மகிழம்பூப் பொடி | 5 |
| கிச்சிலிக் கிழங்குப் பொடி | $2\frac{1}{2}$ |
| கஸ்தூரி மஞ்சள் பொடி | ,, |
| கோரைக் கிழங்கு பொடி | ,, |
| மலாகா சந்தனப் பொடி | $1\frac{1}{2}$ |

இவைகளைக் காரமில்லாத அம்மியிலிட்டுப் பன்னீர் விட்டு மைபோலாகிறமட்டில் அரைத்துக் கொட்டைப்பாக்களவு பில்லைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். ஸ்நானம் செய்யும்போது ஒரு பில்லை எடுத்துப் பால் விட்டு மத்தித்து முகத்தில் பூசிக் குளிக்கவும். இந்தப் பில்லையினால் பிரதி தினம் முகம் அலம்பிக்கொண்டு வந்தால் முகம் பளபளப்பும், மினுமினுப்பும், வசீகரமும் அடையும்.

---

## முக வசீகர பில்லை

| | துலாம் | | துலாம் |
|---|---|---|---|
| கார்போகரிசி | 1 | கோரைக் கிழங்கு | 1 |
| கஸ்தூரி மஞ்சள் | 1 | கச கசா | 1 |
| கிச்சிலிக் கிழங்கு | 1 | பாதம் பருப்பு | 1 |

இவைகளைப் பசும்பால் விட்டரைத்துப் பில்லைகள் செய்து வைத்துக்கொள்ளவும். பிரதி தினம் முகத்திற் குபயோகிக்க, முகத்திலுள்ள மங்கு மாசுகள் விலகும்; நல்ல வசீகர முண்டாகும்.

---

## ஊது வர்த்திகள்

T. 15591

### டில்லி ஊதுவர்த்தி

| | துலாம் | | துலாம் |
|---|---|---|---|
| தாளிசபத்திரி | 1 | தவனம் | 1 |
| லவங்கப்பத்திரி | 1 | மருவு | 1 |
| வெட்டிவேர் | ½ | சடிலா | 1 |
| குறுவேர் | ,, | மகிழம்பூ | 1 |
| சடாமாஞ்சி | 1 | தேவதாரிக்கட்டை | 5 |
| பச்சையிலை | 1 | அகிற்கட்டை | 2 |
| குலாப்பூ | 1 | சந்தனத்தூள் | 4 |
| கவுளா | ¼ | லவங்கப்பட்டை | ¼ |
| அன்லுசிப்பூ | 1 | மஸ்தகி | ¾ |
| கோஷ்டம் | ½ | பேசபனப்ஷா | ¾ |
| கிச்சிலிக் கிழங்கு | ,, | அதிமதுரம் | ½ |
| கிளியூரல் பட்டை | 1 | | |

இவைகள் யாவும் உலர்த்தி இடித்து வஸ்திர காயம் செய்துகொண்டு,

| | | | |
|---|---|---|---|
| அடுப்புக்கரி | 4 | குங்கிலியம் | ¼ |
| சிலாரசம் | 5 | கற்கண்டு | 1 |
| சாம்பிராணி | 5 | மயிலாலக்டி | 1 |

இந்தத் தினுசுகளையும் இடித்து மைபோலாகிற வரையில் அரைத்துப், பின் யாவும் ஒன்றாய்ச் சேர்த்து அரைக்கவும். பதம் வராவிட்டால் கொஞ்

சம் பன்னீர்விட் டரைத்து வர்த்தி செய்து நிழலில் உலர்த்திய பிறகு, 2-துலாம் சந்தன எண்ணெயில் 1-துலாம் புனுகு கலந்து ஷை வர்த்திக்குத் தடவிப் பட்டுத் துணியில் சுற்றி வைத்துக்கொள்ளவும்.

---

## தஞ்சாவூர் ஊதுவர்த்தி

| | பலம் | | பலம் |
|---|---|---|---|
| சாம்பிராணி | 1 | சிறுநாகப்பூ | $\frac{1}{4}$ |
| பச்சையிலை | $1\frac{1}{2}$ | லவங்கப்பட்டை | $\frac{1}{2}$ |
| கிச்சிலிக் கிழங்கு | 1 | வெட்டிவேர் | ,, |
| கிளியூரல்பட்டை | 1 | ஏலரிசி | ,, |
| சம்பங்கி மொக்கு | 1 | தவனம் | ,, |
| சடாமாஞ்சில் | 1 | மருவம் | ,, |
| சந்தனத்தூள் | 2 | லவங்கப்பத்திரி | $\frac{1}{4}$ |
| கொட்டுச்சாந்து | 1 | கவுளா | 1 |
| கார்போகரிசி | 1 | நகம் | $\frac{1}{2}$ |
| குலாப்பூ | $\frac{1}{2}$ | குறுவேர் | ,, |
| அன்னாசிப்பூ | ,, | மட்டுப்பால் | 1 |
| அகிற்கட்டை | 1 | சிலாரசம் | 1 |
| ஜாதிக்காய் | $\frac{1}{2}$ | மைலாலக்டி | 2 |
| லவங்கம் | ,, | சந்தனச்சாந்து | 5 |

ஷை சரக்குகள் யாவும் இடித்து வஸ்திரகாயம் செய்து அம்மியில் கொஞ்சஞ் சூரணம் போட்டு மயிலாலக்டி, சந்தனம் இரண்டும்சேர்த்து அரைத்து மைபோலானபிறகு சிலாரசம், மட்டுப்பால், இவை

கனைப் போட்டு அரைத்து இளம்பதம் வராவிட்டால் சலம் விட்டு அரைத்து வர்த்தி செய்து கொள்ளவும். நிழலில் உலர்த்திய பிறகு அரை அல்லது 1-துலாம் சந்தன அத்தரில் ¾-வராகனெடை புனுகு கலந்து வர்த்திக்கு மேல் கப்பு போட்டு வைத்துக் கொள்ளவும்.

---

## புதுக்கோட்டை ஊதுவர்த்தி

| | துலாம் | | பலம் |
|---|---|---|---|
| சந்தனம் | 30 | பெருலவங்கப்பட்டை | 2 |
| வெட்டிவேர் | 10 | மஸ்தகி | 1 |
| கோரைக்கிழங்கு | 10 | மைலாலக்டி | ,, |
| பளிங்கு சாம்பிராணி | 9 | நிக்கோலி | ,, |
| கிச்சிலிக் கிழங்கு | 9 | மைசாட்சி | ,, |
| சடாமாஞ்சில் | 9 | சிலா ரசம் | 9 |
| கிளியூரல்பட்டை | 3 | வெள்ளைச் சர்க்கரை | 12 |
| அகர் | 2 | | மாஷா |
| லவங்கப் பத்திரி | 3 | ஜாதிக்காய் | 4 |
| பச்சிலை | 3 | லவங்கம் | 4 |
| மலாகா சந்தனம் | 2 | ஏலக்காய் | 4 |
| மருக்கொழுந்து | 2 | ஜபரான் | 4 |
| குலாப்பூ | 2 | அம்பர் | 6 |
| மகிழம்பூ | 2 | கஸ்தூரி | 2 |
| சிறுலவங்கப்பட்டை | 2 | பன்னீர் புட்டி | 1 |

முன் முறையில் சொல்லியபடி வர்த்தி செய்து கொள்ளவும்.

---

## அம்பர் வர்த்தி

### [அத்தர்க்கார சம்பங்கி நாயுடு முறை]

| | துலாம் | | துலாம் |
|---|---|---|---|
| வெட்டிவேர் | 3 | * நகம் | 2¼ |
| கல்பாசி | 1½ | * ஜாதிபத்திரி | 3 |
| சடாமாஞ்சில் | 5 | * லவங்கம் | 3 |
| சம்பங்கி மொக்கு | 3 | * ஏலம் | 3 |
| அகர் | 6 | * கவுளா | 3 |
| லவங்கப்பத்திரி | 2 | * கோஷ்டம் | 3 |
| பச்சையிலை | 3 | * கிளியூரல்பட்டை | 3 |
| மலாகா | 4 | * லவங்கப்பட்டை | 8 |
| மருக்கொழுந்து | 3 | * கிச்சிலிக் கிழங்கு | 6 |
| குலாப்பூ மொக்கு | 3 | தாளிசப்பத்திரி | 3 |
| கின்னேரிப்பட்டை | 3 | தேவதாரிப்பட்டை | 3 |
| ரூம்மஸ்தகி | 2 | * ஜாதிக்காய் பலம் | 1 |
| மைசாட்சி | 1½ | | |

* இக்குறி காட்டிய தினுசுகளை வறுத்து மற்றவையும் சேர்த்து இடித்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு 40-துலாம் எடுத்து வேறே வைத்துக்கொண்டு,

| | | |
|---|---|---|
| மட்டுப்பால் | 12 | பலம் |
| அரைத்த சந்தனம் பில்லை செய்து உலர்த்தின தூள் | 12 | ,, |
| பளிங்கு சாம்பிராணி | 15 | ,, |
| ஆவாரம் விறகு சுட்ட கரி | 18 | ,, |

இவைகளை இடித்துத் தூளாக்கி, முன் சூரணத்துடன் கலந்துகொண்டு நல்ல தண்ணீர்விட்டுப் பிசைந்து மொத்தையான பிறகு அதைக் கொஞ்சம் கொஞ்சமாக அம்மியில் வைத்து அரைத்து மைபோலான பிறகு,

| | | |
|---|---|---|
| சிலா ரசம் | பலம் | 12 |
| நாட்டுக் கற்கண்டு | ,, | 6 |
| தேன் | ,, | 3 |

இவைகளைக் கலுவத்திலரைத்து முன் அரைத்து வைத்திருப்பதுடன் சேர்த்துக் கலந்து கொண்டு அதன் பிறகு,

| | | |
|---|---|---|
| புனுகு | துலாம் | $\frac{3}{4}$ |
| கதிர்ப்பச்சைச் சூரணம் | துலாம் | 3 |

இவ் விரண்டும் முன் மொத்தையுடன் நன்ருய்க் கலக்கும்படிக் கூட்டிப் பிசைந்து வைத்துக் கொண்டு, பின்பு மேல்புரணி சீவின மைலாலக்டி பலம் 6, நிறுத்தெடுத்துப் பொடியாகச் செய்து துணியில் வஸ்திரகாயம் செய்து, முன் அரைத்த மொத்தையைப் பொடிப் பொடியாக உதிரியாக்கி அதில் மைலாலக்டித் தூளைக் கொஞ்சங் கொஞ்சமாய்த் தூவிச் செவ்வையாய்ப் பிசைந்து வைத்துக் கொண்டு வர்த்தி செய்கிறவனைக் கொண்டு வர்த்தி செய்யவும். சுமார் 12 சேர் வர்த்தியாகும். முதலில் கூட்டிய சரக்குகளில் 40-துலாம் போக மிகுதி சூரணத்தைச் சிக்சாப் பொடியாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

---

## வெள்ளை ஊதுவர்த்தி

| | | |
|---|---|---|
| வெட்டி வேர்ப் பொடி | பலம் | 10 |
| சந்தனப் பொடி | ,, | 10 |
| சாம்பிராணிப் பொடி | ,, | 5 |

இவைகளை அம்மியிலிட்டுத் தண்ணீர் விட்டு மைபோ லரைத்து வர்த்தி செய்யவும். இது கடைகளில் விற்கும் மட்ட வர்த்தி.

---

## உயர்ந்த வெள்ளை ஊதுவர்த்தி

| | | |
|---|---|---|
| செஞ்சந்தனம் | பலம் | 5 |
| மலாகா சந்தனம் | ,, | 5 |
| கிச்சிலிக் கிழங்கு | ,, | 5 |
| புனுகு | வராகனெடை | 1 |
| புனுகு சட்டம் | ,, | 1 |
| அம்பர் | ,, | 1 |
| கஸ்தூரி | ,, | ¼ |

இவைகளைச் சேர்த்துச் சுத்தமான கலுவத்திலரைத்து, வர்த்தி செய்கிறவர்களைக்கொண்டு மிதமான அளவுடையதாய்ச் செய்து வைத்துக் கொள்ளவும்.

---

## தூர் வர்த்தி

| | பலம் | | பலம் |
|---|---|---|---|
| சந்தனத்தூள் | 10 | சடாமாஞ்சில் | 1 |
| சாம்பிராணித்தூள் | 5 | வெட்டிவேர் | ,, |
| கிளியூரல்பட்டை | 2 | கோரைக்கிழங்கு | ,, |
| கிச்சிலிக்கிழங்குத்தூள் | 1 | மைலாலக்டி | ,, |

இவைகளை அம்மியிலிட்டு ஒரு புட்டி பன்னீரினுல் மைபோல் அரைத்துப் புனுகு சட்டம் ஒன்று சேர்த்து நன்ருய்க் கலக்கும்படி அரைத்து வர்த்திகள் செய்துகொள்ளவும்.

# பரிமள எண்ணெய்கள்

## சுகந்த கூந்தல் எண்ணெய்

| | |
|---|---|
| * ரோஜாப்பூ பச்சை | கொடியா சீனக்கிழங்கு |
| * வெட்டிவேர் | ஜடாமாஞ்சில் |
| * சம்பங்கிமொக்கு பச்சை | பெரிய லவங்கப்பட்டை |
| * தவனம் | லவங்கப்பத்திரி |
| * கவுளா | ஜாதிக்காய் |
| மகிழம்பூ | ஜாதிப்பத்திரி |
| கோஷ்டம் | ஏலக்காய் விதை |
| சிறுநாகப்பூ | கோரைக்கிழங்கு |
| சோம்பு | கஸ்தூரிமஞ்சள் 2-துலாம் |
| அதிமதுரம் | நல்லெண்ணெய் $1\frac{1}{2}$ வீசை |
| கல்பாசி | திருநீற்றுப்பத்திரி 1-பிடி |
| கிச்சிலிக்கிழங்கு | இளநீர் 4-காய் |
| சந்தனத்தூள் | பசுப்பால் அரைப்படி |

இதிற் கண்ட தினுசுகள் வகைக்கு அரைப் பலம் வீதம் எடுத்துக்கொள்ள வேண்டியது.

* இந்த மார்க்கு செய்துள்ள 5 தினுசுகள் நீங்க மற்றவை இடித்து மண்பாண்டத்திலிட்டு இள நீர் விட்டு அதன்பிறகு கவுளா என்பதை உடைத்துப் போட்டு மற்ற நான்கு தினுசுகளும் ஒன்றிரண்டாய் இடித்துச் சேர்த்துப் பசுப்பால் விட்டு மாத் துடுப்பினல் கீழ் மேலாகக் கலக்கும்படிக் கிளரி மேலே மூடி அப்படியே ஒரு நாள் வைத்திருக்க

வேண்டியது. மறுநாள் நல்லெண்ணையை விட்டுக் கலக்கி அடுப்பிலேற்றிக் காய்ச்சவும். முதல் முதல் தீயை உபாயமாய் எடுத்து நடு பாகத்தில் சற்று அதிகப்படுத்தவும். தீ அதிகமானால் எண்ணெய் பொங்கிவிடும். ஜாக்கிரதையாய்ச் செய்யவேண்டியது. வாசனை கமகம வென்று பரிமளிக்கும். அந்தச் சமயத்தில் எண்ணெயைத் தொட்டுக் கொளுத்திப் பார்த்துச் சிடுசிடுப்பில்லா திருந்தால் இறக்கிவிடவும். சூடா யிருக்கும்போதே சுருள் பட்டை இடித்த தூள் 5-பலம் கலந்து மூடிவிட்டு மறுநாள் வடிகட்டிக் கொள்ளவும். இது முதல் தர எண்ணெய்.

---

## சம்பங்கி எண்ணெய்

நல்லெண்ணெய் 1 வீசை, சம்பங்கி இதழ் 2 பிடி, வால்மிளகு, கோரைக்கிழங்கு, கஸ்தூரிமஞ்சள், பூலாக்கிழங்கு, கோஷ்டம், அகில்கட்டை இவற்றின் தூள் வகைக்கு 2 பலம், இவை யாவும் ஒரு ஜாடியில்போட்டு வாய்ப்புறம் உளுந்துமாவால் கவசம் செய்து ஒரு பெரிய பானையில் அரைப்பங்கு ஜலம் விட்டு அதின்மீது இரண்டு விறகடை ஜாடியில் "டோலயந்திரம்" கட்டி 60-நாழிகை எரித்து எடுத்து வடித்துக்கொள்ளவும்.

---

## சந்தன எண்ணெய்

சந்தனத்தூள் பலம் 8, நல்லெண்ணெய் பலம் 10, இவைகளைப் பதக்கு நீரிற் கலந்து நீர் வற்றக் காய்ச்சி வடித்துச் சீசாவில் வைத்துக்கொண்டு பஞ்சிற் றேய்த்துக் கையில் வைத்திருக்கத் தேகத்தில் வாடை யேறிச் சுகத்தைத் தரும். சொரி, சிரங்கு, கரப்பான் முதலிய புண்களிற் றடவ அவை நீங்கும்.

---

## சாமந்திப்பூ எண்ணெய்

நல்லெண்ணெய் 2-படியில் அப்போது அறுத்த சாமந்திப்பூ அரைப்படி போட்டுச் சூரிய புடம் வைக்கவும். நான்கு நாட்கள் பொறுத்து அந்தப் புட்பங்களை யெடுத்துத் துணியிற் போட்டுப் பிழிந்து எண்ணெயை எடுத்துக்கொண்டு மறுபடியும் அன்றறுத்த சாமந்திப்பூ அரைப்படி போட்டுச் சூரிய புடம் வைக்கவும். இப்படி மூன்று முறை செய்து அந்த எண்ணெயை எடுத்துக்கொண்டு அரைப் பங்கு ஜலம் நிரப்பிய பாண்டத்தை அடுப்பிலேற்றி, அதின் நடுவில் மூன்று சிறு கற்களிட்டு அதன் மேல் எண்ணெய்ப் பாண்டத்தை வைத்துத் தீ யெரித்து அந்தத் தண்ணீரின் சூட்டினால் எண்ணெய் அரைத்திட்டம் காய்ந்தவுடன் சிட்டி நிலா என்னும் திராவகம் ஒரு அவுன்சு விட்டுக் கலந்து இறக்கிப் புட்டியில் வைத்துக்கொள்ளவும். எண்ணெய் காயும்போது காற்றுப் புகாமல் மேல் மூடிச் சீல் செய்ய வேண்டும்.

---

## சீமைச் சாமந்திப்பூ எண்ணெய்

ஒரு வீசை நல்லெண்ணெயில் இரண்டுபிடி அல்லது மூன்றுபிடி சாமந்திப் புஷ்பங்களைப் போட்டுச் சூரிய புடம் வைக்கவும். 10-நாள் வரையில் வெயிலில் வைத்து அந்தப் புஷ்பங்களை எடுத்துவிட்டு எண்ணெயை வடிகட்டிச் சீசாவில் விட்டுக்கொண்டு,

ரோஸ் எசன்ஸ் ஒரு அவுன்ஸ்

டின்சர் கந்தார்டீஸ் அரை அவுன்சு

இவ்விரண்டும் விட்டுக் கார்க்கினல் மூடிச் சீசா வுடன் ஒரு நாள் சூரியபுடம் வைத்து எடுத்துக் கொள்ளவும். இதை அன்றுடம் தலைக்குத் தடவிக் கொண்டு வந்தால் மயிர்வளரும்.

---

## சுகந்த சிரோரஞ்சனி எண்ணெய்

| | | |
|---|---|---|
| கழுவியாடிய நல்லெண்ணெய் | வீசை | 1 |
| சம்மர்கப் | அவுன்சு | 2 |
| யார்க்கமெண்டு | ,, | 1 |
| சிட்டிலா | ,, | 1 |
| கர்பிலியம் | ,, | 1 |
| மல்லிகைப்பூ எசன்சு | ,, | ¼ |

முன்னதாக நல்லெண்ணெய் மாத்திரம் அடுப்பிலேற்றிக் கொஞ்சம் சூடுண்டானவுடனே அல்கனேட்ரூட் என்னும் வருணப் பட்டையின் தூளை ஒவ்வொரு சிட்டிகையாகப் போட்டு எவ் வளவு நிறம் வேண்டுமோ அவ்வளவு நிட்டம் வந்த

வுடன் இறக்கிக் கீழேவைத்து மற்ற ஐந்து வாசனை களையும் விட்டு வாய்ப்புறம் மூடி வைத்து அப் படியே ஆறியபின் சீசாக்களில் அடைத்துக் கொள்ளவும்.

இந்த எண்ணெய்க்கு நிகர் எந்த எண்ணெயுங் கிடை யாது. நினைத்த வாசனையெல்லாங் கொடுக்கும். எண் ணெய் கலக்கும்போதே வீடெல்லாம் பரிமளிக்கும்.

---

## வேறு முறை

எண்ணெய் பழகிய பாண்டம் அடுப்பிலேற் றித் தேங்கா யெண்ணெய் 1-பவுன் போட்டு சிறு தீயாகக் காய்ச்சவும். சற்று சூடுண்டானவுடனே அலெக்னெட்ரூட் என்னும் வருணப்பட்டையின் தூளை ஒவ்வொரு சிட்டிகையாகப் போட்டு எண் ணெய் எவ்வளவு சிவப்பாக வேண்டுமோ அந்தத் திட்டத்தில் தூளை நிறுத்தி எண்ணெயை இறக்கிக் கீழே வைத்துகொண்டு,

| | | |
|---|---|---|
| பார்க்கமெண்டு | அவுன்சு | $\frac{1}{2}$ |
| சிட்டிநிலா | ,, | ,, |
| கர்பிலியம் | ,, | ,, |

இவைகளை விட்டுக் காற்றுப் புகாமல் மேலே மூடி வைத்து ஆறியபின் திறந்து சீசாவில் அடைத்துக்கொள்ளவும்.

இந்த எண்ணெயானது வாசனை, நிறம், குணம் யாவற்றிலும் கல்கத்தா எண்ணெய் போலவே இருக்கும்.

---

## மதன காமேசுரப்பூ எண்ணெய்

இரண்டு சேர் மதன காமப்பூவை மலருமுன் னெடுத்துப் பதக்கு ஜலத்திற்போட்டு வைத்திருந்து மலர்ந்தவுடன் எடுத்து நாலு பலம் நல்லெண்ணெய் விட்டு வேகவைத்து இறக்கி எண்ணெயை வடி கட்டி சீசாவிலடைத்துக்கொண்டு உடம்பிற் பூசிக் கொள்ளச் சுகம் நல்கும்; வசியமாகும்.

---

## மயிர் வளரும் தைலம்

| | |
|---|---|
| கோரைக் கிழங்கு | சந்தனக்கட்டை |
| முதியார் கூந்தல் | அகில்கட்டை |
| விலாமிச்சம் வேர் | தேவதாரிக்கட்டை |
| வெட்டி வேர் | ஆலம் விழுது |

இவைகளை வகைக்குப் பலம் 2-ஆக இடித்துப் பதக்கு ஜலம்விட்டு எட்டுக்கு ஒரு பங்காய்க் காய்ச்சி இறக்கி நன்ருய்ப் பிசைந்து பிழிந்து வடி கட்டி யெடுத்துக்கொண்டு,

| | |
|---|---|
| பச்சிலை | செம்மரக்கட்டை |
| கிச்சிலிக்கிழங்கு | சடாமாஞ்சில் |
| கஸ்தூரி மஞ்சள் | செவ்வள்ளிக்கொடி |
| மதுரம் | கிளியூரல்பட்டை |
| கோஷ்டம் | பூஞ்சாந்து |
| ஏலரிசி | |

இவைகளை வகைக்குப் பலம் ¼-ஆக இடித்துப் பால்விட்டு அரைத்து ஒருபடி நல்லெண்ணெயிற்

போட்டு ஷை கியாழமும் விட்டு எரித்துத் தைல பதம் கண்டு இறக்கித் தலை முழுகி வரவும். பிரதி தினம் கூந்தலுக்கும் தடவி வரவும். மயிர் செழித்து வளரும்.

---

## வேறு முறை

| | |
|---|---|
| செம்பரத்தம்பூ | கஸ்தூரி மஞ்சள் |
| வெட்டிவேர் | மருதோன்றி யிலை |
| விலாமிச்சம்வேர் | மருதோன்றி விதை |
| மதனகாமப்பூ | சிறுகீரை விதை |
| சண்பகப்பூ | அரைக்கீரை விதை |
| பூலாக்கிழங்கு | ஆலம் விழுது |

இவைகளை வகைக்குப் பலம் 1-ஆக நைய நறுக்கித் துணியில் முடிந்து ஒரு படி நல்லெண்ணெ யிற் போட்டு 10-நாள் சூரிய புடம் வைத்தெடுத்து முடிப்பை நன்றாய்க் கசக்கிப் பிழிந்துகொண்டு மயி ரில் தடவி வந்தால் மயிர் வளரும். வாசனை வேண்டுமானால் புனுகு சவ்வாது சேர்த்துக் கொள்ளவும்.

---

## மயிர் வளரும் எண்ணெய்

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | வீசை 1 |
| முழுமிளகு | பலம் 2 |
| சீரகம் | ,, 3 |
| அறுகம்வேர் | ,, 4 |

மேற்சொல்லிய சரக்குகள் மூன்றையும் வெவ்வேருக மூன்று துணிகளில் முடிந்து எண்ணெயில் போட்டுப் பிரதிதினமும் சூரியபுடம் வைக்கவும். 20-நாட்கள் தவருமல் வைத்த பிறகு அந்த எண்ணெயைத் தலைக்குத் தடவி வரவும். வாரத்திற் கொருமுறை அதே எண்ணெயில் தலை முழுகி வரவும். பாதி ஆய்விட்டால் திரும்ப அரை வீசை எண்ணெய் அதே பாண்டத்தில் விட்டுக் கொள்ள வேண்டியது. பிரதிதினமும் தவருமல் சூரியபுடம் வைத்துக் கொண்டே யிருக்க வேண்டும்.

தலைமயிரை அளந்து பார்த்துக்கொண்டு இரண்டு மாதம் இந்த எண்ணெய் உபயோகப் படுத்தியபின் திரும்ப அளந்து பார்க்கலாம். தப்பாமல் வளரும். கண்ணெரிவு, கண்ணீர்ப் பாய்ச்சல், பித்தமயக்கம், தலைப்பாரம் இவைகளுந் தீரும். கண் குளிர்ச்சி யுண்டாகும்.

# சந்தனாதித் தைலங்கள்

## சந்தனாதித் தைலம்

நல்லெண்ணெய், ஆவின்பால் வகைக்குப் படி-1, ஒன்றாய்க் கலந்து அதில் 1-பலம் சந்தனத் தூளும், கால் பலம் திருமஞ்சனத் திரவியமும் ஆவின்பாலிலரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரப் பித்தமேகம், உடம்பெரிவு, வெட்டை, கண் கை கால் காந்தல் தீரும்.

---

## பெருஞ் சந்தனாதித் தைலம்

(எட்டுப்பிரதி முறை)

| | |
|---|---|
| நன்னாரி வேர் | அகில்கட்டை |
| நத்தைச்சூரி | வில்வவேர் |
| தண்ணீர்விட்டான்கிழங்கு | தேவதாரம் |
| சாரடை வேர் | மதுரம் |
| இருவேலி | கோஷ்டம் |
| அமுக்கிராங்கிழங்கு | லவங்கம் |
| சிந்தில்கொடி | லவங்கப்பத்திரி |
| முத்தக்காசு | கருவாப்பட்டை |
| அதிமதுரம் | தக்கோலம் |
| செஞ்சந்தனம் | லவங்கப்பட்டை |

இவைகளை வகைக்குப் பலம் 1-ஆக இடித்து சந்தனத்தூள் பலம் 10-சேர்த்துத் தூணிநீரிற்

போட்டுப் பதினொன்றிலொன்றாய் வற்றவைத்து வடித்து அதில், நல்லெண்ணெய் படி 4, முசுமுசுக்கைச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு வகைக்குப் படி 1, பொற்றலைக்கையான் சாறு படி 1, இவைகளைக் கலந்து;

| | |
|---|---|
| வால்மிளகு | வெளிச்சிப்பிசின் |
| குக்குல் | வேம்பாடம்பட்டை |
| பச்சைப்பூலாக்கிழங்கு | ஏலம் |
| அரத்தை | மல்லி |
| சடாமாஞ்சில் | அபின் |
| ஓமம் | சாதிக்காய் |
| கருஞ்சீரகம் | சிறுநாகப்பூ |
| கார்போகரிசி | கிராம்பு |
| சாதிப்பத்திரி | கிளியூரல்பட்டை |
| மாசிக்காய் | நாகணம் (நகம்) |
| சண்பகப்பூ | புனுகு |

இவைகளை வகைக்கு வராகனெடை 2-ஆக ஆவின்பாலிலரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவர வாயு, மந்தம், மூக்கு நீர்ப்பாய்ச்சல், மண்டைநோய், கபாலவலி, கண்ணோய், செவி நோய், வியர்வை, தாகம், பீநசம், வரட்சி, சுளை, சோகை, விஷபாகம், குஷ்டம், குன்மம், தடிப்பு, க்ஷயம், மேகம், பிரமேகம், கிறுகிறுப்பு, அரோசகம் இவை நீங்கும்.

---

## மஹா சந்தனாதித் தைலம்

### (எட்டுப்பிரதி முறை)

சந்தனத் தூள் பலம் 20, விலாமிச்சம் வேர், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, சீந்தில்தண்டு, சிற்றாமுட்டி, பேராமுட்டி, அமுக்கனாங்கிழங்கு, நன்னாரி, பர்ப்பாடகம் வகைக்குப் பலம் 4, இவைகளை இடித்து இரு தூணி நீரிற் போட்டுப் பதினாறி லொன்றாய் வற்றவைத்து வடித்த கியாழத்தில்,

| | |
|---|---|
| செவ்விளநீர் படி 2 | கர்ப்பூரவல்லிச்சாறு |
| பொன்னாங்காணிச்சாறு | தாழைவிழுதுச்சாறு |
| சிறுகீரைச்சாறு [2 | ஆவின் நெய் வகைக்குப் படி 1 |
| பொடுதலைச்சாறு | நல்லெண்ணெய் படி 3 |
| வல்லாரைச்சாறு | ஆவின் பால் படி 4 |
| பொற்றலைக்கரிப்பான் சாறு | வெள்ளாட்டுப் பால் |
| சிறுசின்னியிலைச்சாறு | தயிர்த்தண்ணீர் |
| நெல்லிக்காய்ச்சாறு | வகைக்குப் படி 2 |

கலந்து, திரிகடுகு, திரிபலாதி, கஸ்தூரி மஞ்சள், ஏலம், பூஞ்சாந்துப் பட்டை, கிளியூரல் பட்டை, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, பச்சைப் பூலாக் கிழங்கு, செவ்வல்லிக்கொடி, செண்பகப்பூ, சந்தனம், கருஞ்சீரகம், நற்சீரகம், செங்கழுநீர்க்கிழங்கு, கோஷ்டம், அக்கராகாரம், மஞ்சிஷ்டிவேர், முத்தக் காசு, வலம்புரிக்காய் வகைக்குப் பலம் அரை, ஆவின்பாலி லாட்டிப் போட்டுக் காய்ச்சி வடித்து அதில் குங்குமப்பூ, கோரோஜனம், புனுகு வகைக்

குக் கழஞ்சு-1, போட்டுத் தலை முழுகிவரப் பிரமேகம், நீரிழிவு, நீர்ச்சிறுப்பு, க்ஷயம், கண்ணெரிவு, கண்புகைச்சல், கைகாலெரிவு, பிரமியம், கிராந்தி, கற்றாழை நாற்றம், அஸ்திசுரம், அஸ்திவெட்டை, பித்த மயக்கம், புண் புரைகள், புழுவெட்டு, கண்டமாலை, குஷ்டம், சொரி சிரங்கு தீரும்.

---

## அரக்குச் சந்தனாதித் தைலம்

ஆற்று ஜலம் படி 8-ல் கொம்பரக்கு வீசை 1 போட்டு ஒரு படி ஜலமாக வற்றக் காய்ச்சி இறக்கி அதில் பசுப்பால் படி 1, நல்லெண்ணெய் படி ½, பசு நெய் படி ½, சிற்றாமணக்கெண்ணெய் படி ½, இவை யாவும் ஒன்றாய்ச் சேர்த்துக் கொண்டு அதிமதுரம், சந்தனத்தூள், அகர்சக்கை, வெட்டிவேர், குறுவேர், கஸ்தூரி மஞ்சள், மிளகு, ஏலரிசி, சோம்பு, சீரகம், ஜாதிபத்திரி, கிச்சிலிக் கிழங்கு, லவங்கப்பத்திரி வகைக்குப் பலம் 1, இவைகளை இடித்து மேற்படி பாண்டத்தில் போட்டு நன்றாய்க் கலந்து அடுப்பேற்றிக் கமலாக்கினியாய் எரித்து மெழுகு பதம் வந்தபோது இறக்கி வடித்துச் சீசாவில் வைத்துக்கொள்ளவும். 6 நாளைக் கொருமுறை தலைமுழுகி வரவும்.

சூலைநோய், காசம், இருமல், பித்த மயக்கம், கற்றாழை நாற்றம் இவைகள் நாலைந்து ஸ்நானத்தில் நிவர்த்தியாகும். இச்சாபத்தியம்.

---

## அனுபவ சந்தனாதித் தைலம்

சவுரிக்கிழங்கு வீசை 1-இடித்து இரசம் பிழிந்து அதில் எவ்வளவு பால் வருகிறதோ அவ்வளவு புளிப்புத் தயிர் சேர்த்துக்கொண்டு அதற்குச் சரி எடை நல்லெண்ணெய் சேர்த்து அடுப்பேற்றி நீர் சுண்டிய பிறகு கார்போகரிசி பலம்-$1\frac{1}{2}$, மிளகு பலம்-$1\frac{1}{2}$, சீரகம் பலம்-$1\frac{1}{2}$, இம்மூன்றும் பொடித்து வைத்திருந்து தைல பதம் காணும்போது அதில் போட்டு இறக்கி வைத்துக்கொள்ளவும்.

அவிழ்தம் சாப்பிடும்போதே நிறுத்தி ஸ்நானம் செய்யக்கூடிய தைலம். மேகசாந்தி, பித்தவாய்வு, மேகவாய்வு, நேத்திரவாய்வு இவை தீரும். கண்களுக்கு ஆரோக்கியமா யிருக்கும்.

---

## சிறு சந்தனாதித் தைலம்

சந்தனம், விலாமிச்சம் வேர், ஆவிரையின் பட்டை வகைக்குப் பலம் 10 இடித்துத் தூணி நீரிற் போட்டு எட்டொன்ருய் வற்ற வைத்து வடித்த கியாழத்தில் நல்லெண்ணெய் படி 1-கலந்து, அதில் நன்னாரிவேர்ப் பட்டை பலம்-1 அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவா மேகந் தீரும். தேக மிறுகும்.

---

# தைலங்கள்

## கொம்பரக்குத் தைலம்

கொம்பரக்கு பலம்-8 தூணி நீரிற்போட்டு எட்டொன்ருய்க் கியாழஞ் செய்து வடித்துக் கொண்டு அதில் நல்லெண்ணெய் படி-2½, காடி படி-1, தயிர்த் தண்ணீர் படி-1, பால் படி-2½, சதகுப்பை, கடுகுரோகணி, கிளியூரல்பட்டை, பூஞ்சாந்து, பச்சைப் பூலாக்கிழங்கு, செவ்வள்ளிக் கொடி, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, சடாமாஞ்சில், கோஷ்டம், கஸ்தூரிமஞ்சள், அதிமதுரம், கந்தகம், கருஞ்சீரகம், நற்சீரகம், ஏலம் வகைக்குக் கழஞ்சு-2, ஆவின்பாலி லாட்டிச் சேர்த்து மெழுகு பதத்தில் வடித்து ஒன்று விட்டொரு நாள் முழுகி வரப் பித்தவெட்டை, அஸ்திசுரம், தலை மயக்கம், வாயூரல், சீதசுரம், வெட்டை, கண்சுரம், கணபாண்டு, தேக வெளுப்பு, சூலை, தழுதணை, காசம், கற்ருழை நாற்றம் இவை தீரும்.

---

## அகிற்கட்டைத் தைலம்

அகிற்கட்டைத்தூள் பலம்-50 தூணி நீரிற் போட்டு எட்டொன்ருய் வற்றவைத்து வடித்து அதில் நல்லெண்ணெய் படி-1 விட்டு அதிமதுரம், தான்றிக்காய் வகைக்குப் பலம்-1 ஆவின்பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவர நீர்த்தோஷம் மேகம் தீரும்.

---

## கஸ்தூரி தைலம்

குங்கிலியம், படிகாரம், வெங்காரம், சுக்கு, திப்பிலி, அதிமதுரம், இந்துப்பு, களிப்பாக்கு, லவங்கம், ஜாதிக்காய், கருஞ்சீரகம், நிர்விஷம் வகைக்கு 1½-வராகனெடை, லிங்கம் 3-வராகனெடை, கெந்தகம் 4-வராகனெடை, இரசம் 2-வராகனெடை, காந்தம் 3-வராகனெடை, பால்துத்தம் ½-வராகனெடை, துருசு 3-வராகனெடை இவைகளைக் கோழி யவரை இரசத்தில் அரைத்து மேற்படி ரசம் படி-1, எலுமிச்சம் பழரசம் படி-1, நல்லெண்ணெய் படி-1, இவை யாவுங் கலந்து அடுப்பேற்றி மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து வைத்துக் கொள்ளவும்,

நாள் ஒன்றுக்கு ஒரு காசு எடை யெடுத்துக் காலையில் சாப்பிட வேண்டும். இப்படி 3-நாள் சாப்பிடவும். இதற்குள் சொரி, குஷ்டசொரி, கரப்பான், வாய்வு, இடுப்புச்சொரி, கிரந்தி, சூலை, அண்டவாதம், அந்தர் வாதம் முதலிய சகல மேகமும் தீரும். இச்சாபத்தியம்.

---

## தம்பனத் தைலம்

சிவப்புப் பசுவின்பால் 1-படி கொண்டுவந்து அதில் 60-வெள்ளெருக்கம் பூவைப் போட்டுக் காய்ச்சவும். பூக்கள் நன்றாய்க் குழையுமட்டுங் காய்ச்சிப் புரை குத்தி மறுநாட் காலையில் கடைந்து வெண்ணெய் எடுத்து அதில் பச்சைப் புனுகு கோரோசனை இவைகள் கொஞ்சம் கலந்து மத்

இத்து லிங்கத்தில் பூசிப் புணர்ந்தால் ஆண்பெண் இருவருக்கும் அதிக இன்பமுண்டாகும். புத்திர சந்தானம் ஏற்படும்.

T. 15591

## சாம்பிராணித் தைலம் *

வாய் அகன்ற ஒரு சட்டியில் 2-பலம் பளிங்குச் சாம்பிராணியைச் சிறு துண்டுகளாய் நறுக்கிப் போட்டுத் தண்ணீர்விட்ட தட்டு (அல்லது) பாத்திரத்தை மேலே வைத்து அந்தச் சட்டியை அடுப்பிலேற்றி விளக்குப்போல் சிறு தீயாக எரித்தால் தைலம் படிந்திருக்கும். அதை வழித்துக்கொண்டு, தலைவலி, ஜலுப்பு இவைகட்குக் கன்னப் பொறியில் தடவலாம்.

## கர்ப்பூரத் தைலம் *

கர்ப்பூரத் தைலத்தில் இரண்டு விதம் உண்டு. முதலாவது டைரோபல்நாப்ஸ் என்னும் மரத்தின் அடிப்பாகங்களிலிருந்து தைலத்தை வெட்டி எடுப்பது. இரண்டாவது கர்ப்பூரக் கட்டையை ஜலத்தில் ஊறவைத்து நன்ருக வடிகட்டி மஞ்சளாக வரும் திரவ வுஸ்துவிலிருந்து அழுக்கை நீக்கிச் சுத்தமான கர்ப்பூரத் தைலம் செய்வதற்கு அந்தத் திரவ வஸ்துவின் உஷ்ணத்தைத் தணிப்பதேயாகும்.

* சாம்பிராணிப் பதங்கம், கர்ப்பூரப் பதங்கம் எடுத்தல், கர்ப்பூரம் செய்தல் முதலிய பல அரிய முறைகளை இந்நூலுக்கு இரண்டாம் பாகமாகிய கனக சாஸ்திரம் என்னும் நூலில் விளக்கமாய்க்காணலாம். விலை அணு 12.

# ஷர்பத்துகள்

## பாகு செய்யு முறை

நமது நாட்டில் தற்காலம் ஜனங்கள் ஆகாராதிகள் பானங்கள் முதலியவற்றில் மிக்க நாகரீகமடைந்து வருகிறுர்கள். அவற்றுள் காலத்துக்குத் தக்கபடி ஸிரப்பு அதாவது ஷர்பத் கலப்பும் ஒன்று. பெரும்பாலும் பழங்களின் ரசங்களையாவது, சத்துக்களையாவது கலந்து இவைகள் செய்யப்படுகின்றன. ஷர்பத்துகளைச் செய்வதில் சுத்தி செய்யப்பட்ட சர்க்கரையையும், வாலை நீர் அல்லது சுத்தமான மழை நீரையுந்தான் உபயோகப்படுத்த வேண்டும்.

இல்லாவிட்டால் பழச் சத்துக்களும் சர்க்கரையும் கலந்து உறைந்துவிடுவதற்கு இடமுண்டு. ஸிரப்புகளை இருவிதமாகச் செய்யலாம்; பச்சை முறையொன்று, காய்ச்சின முறையொன்று. பச்சை முறையால் செய்வது சுலபம்; காய்ச்சு முறையில் செய்யப்படுவது நாள்பட நிற்கும். குளிர்ந்த முறையாவது சர்க்கரையில் தண்ணீர் விட்டு அது முற்றிலும் கரைந்து வரும் வரையில் கலக்கிக்கொண்டிருப்பது; அல்லது சர்க்கரையில் தண்ணீரைவிட்டு வடிகட்டிக் கொள்வது. தண்ணீரில் சர்க்கரையைக் கலந்து காய்ச்சுவது காய்ச்சு முறையாம்.

---

## காய்ச்சு முறை

ஒரு பெரிய பாத்திரத்தில் 25 பவுண்டு சர்க்

கரையையும், 4 காலன் சுத்தமான தண்ணீரையும் கலந்து சூடு கொடுத்து நன்ருகக் கலக்கவேண்டும். சுத்தம் செய்யப்படாத சர்க்கரையாக விருந்தால் சர்க்கரையை குவிர்ந்த ஜலத்தில் கரைத்துக் கொண்டு கோழி முட்டையின் வெள்ளைக் கருவைக் கலந்து சூடு கொடுத்துக் கலக்கினுல் கலப்பானது நுரையாக மாறி வரும். அப்படியே கலக்கிக் கொண்டிருந்தால், கலப்பின்மீது ஆடைகட்டத் துவக்கும். இவ்வாறு படர்ந்து வரும் அழுக்கு ஆடையைத் தட்டையான அகப்பையால் அடிக்கடி எடுத்துக் கொண்டு வரவேண்டும்.

கலப்பானது இளங் கொதிப்புக் கண்ட வுடனே அடுப்பிலிருந்து கீழே இறக்கிவிட வேண் டும். கொஞ்சம் சூடு தணிந்த பிறகு மேலே படர்ந் திருக்கும் ஆடையை நீக்கிவிட்டுச் சுத்தமான கம்பளத்துணியை (Flannel) க் கொண்டு வடி கட்டவேண்டும். சுத்தி செய்யப்பட்ட சர்க் கரையை உபயோகிப்பதில் மேலே காட்டிய தொந் தரவுகள் கிடையாது.

இதில் கொடுக்கப்படும் சூடு இளஞ்சூடாகவே இருக்கவேண்டும். கொதி சூடாக இருந்தால் தாதுக் கள் ஒன்றுடன் ஒன்று கலந்து கலப்பு நாளடைவில் கெட்டுப்போய்விடும். ஆகையால் கலப்பைத்தயார் செய்வதில் பாத்திரத்தில் சர்க்கரையை எடுத்துக் கொண்டு அதில் தண்ணீரை ஊற்றிச் சிலமணி நேரம் வரையில் மூடி வைத்து அடிக்கடி கலக்கிக் கொண்டு வரவேண்டும். அதன்பிறகு நீராவியின் உதவியால் சூடுகொடுக்கலாம். அல்லது ஒருபெரிய

பாத்திரத்தில் தண்ணீரை எடுத்துக்கொண்டு, அந்தத் தண்ணீரைச் சூடாக்கி, அதில் சர்க்கரைக் கலப்பு இருக்கும் பாத்திரத்தை வைத்துச் சுடவைக்கலாம். இதற்கு Water Bath (வாட்டர் பாத்) என்று பெயர். ஸிரப் சரியாகக் காய்ந்து விட்டதா என்பதை யறிவது எப்படி யென்றால், அகப்பை யால் கலப்பை எடுத்துவிட்டால் சுத்தமான எண்ணெயைப்போல இருக்கவேண்டும். அல்லது ஒரு துளியை எடுத்துக் கட்டைவிரல் நகத்தின்பேரில் வைத்து ஆள்காட்டி விரலால் தொட்டுப் பார்த்தால் தந்திக்கம்பி மாதிரியாக வரும். இதுதான் சரியான பதம். இவ் விஷயத்தில் பெரிய ஸிரப் தொழில் சாலைகளில் Baume's Sacchrometers என்னும் கருவிகளை உபயோகப்படுத்துவது நலம்.

---

## பச்சை முறை

சாதாரணமாக வீடுகளில் கொஞ்சமாகச் செய்வதாக இருந்தால் சர்க்கரை ஒரு பவுண்டுக்கு அரைக்கால் காலன் தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டும். சர்க்கரையை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு தண்ணீரை அதன்மேல் ஊற்றி மரத் துடுப்பால் சர்க்கரை நன்றாகக் கரையும்படிக் கலக்க வேண்டும். இதற்கு அடியில் ஒரு வடி கட்டும் குழாய் வைத்த மேல்மூடியுள்ள மண் ஜாடியை உபயோகிப்பது நலம்.

மற்றொரு முறை:—இது காப்பிக் கடைகளில் வடிகட்டிப் பாத்திரத்தின் உதவியால் அரக்கை வடிகட்டி எடுக்கும் முறையைப்போன்றதே. ஒரு

பெரிய துத்தநாகத் தகட்டை எடுத்துக்கொண்டு இரண்டு அடி நீளமும் மேலே 8 அங்குலமும் அடியில் 4 அங்குலமும் அகலமான ஒரு பாத்திரத்தைச் செய்து கொள்ளவேண்டும். அடியில் நெருங்கின நாகக் கம்பிகளாலாகிய வலைச் சல்லடையை அமைத்துக்கொண்டு அடித் தகட்டை பொனல் மாதிரியாக வளைத்துக் கொள்ளவேண்டும். இதற்கு வடிகட்டி அல்லது பர்கோலேடர் என்று பெயர்.

இதன் பிறகு ஒரு சிறிய மரப்பீப்பாவை எடுத்துக்கொண்டு, அதன் அடியில் ஒரு வடிகட்டிக் குழாயை அமைத்துக்கொண்டு, பீப்பாவின் மேல் தட்டில் ஒரு துவாரம் செய்து, அதன்மேல் பர்கோலேடரைத் தூக்கி வைக்கவேண்டும். இதை முற்றிலும் ஒரு மரப்பெட்டியின்மேல் தூக்கி வைக்கவேண்டும். அப்போதுதான் வடிகட்டப்பட்ட சர்க்கரைப் பாகை வடிகட்டிக் குழாய் வழியாக இறக்கிக் கொள்ளுவது சுலபமாகும்.

இவ்வாறு பாத்திரம் அமையச் செய்து கொண்ட பிறகு, பர்கோலேடரில் முக்கால் பாகம் சர்க்கரை நிறைத்துக் கால்வாசி ஜலத்தை ஊற்றி வைத்தால் சர்க்கரைப்பாகு சல்லடை வழியாகப் பீப்பாவில் இறங்கும். வடிகட்டிக் குழாய் வழியாக வெளியே வரும். இதை ஒரு பாத்திரத்தில் சேகரித்துக் கொள்ளலாம்.

---

## பழச்சாற்றில் ஷர்பத்து செய்தல்

பழச்சத்து ஷர்பத் செய்வதென்றால் பழத்தின்

ரஸமும், சர்க்கரைப் பாகும் சிறிது ஸோடாவும் சேர்த்துச் செய்யவேண்டும். அல்லது சர்க்கரைப் பாகுடன் பழச் சத்து (ஆஸிட்) திராவகத்தைச் சேர்த்துச் செய்துகொள்ளலாம்.

ஷர்பத் செய்யப்படுவதில் உபயோகப்படும் பழங்கள் மரங்களிலேயே நன்ருகப் பழுத்தவைக ளாக இருக்கவேண்டும். பழங்களைப் பரித்தவுடனே உபயோகிக்க வேண்டும். பழங்களைப் பரித்து அவற்றி லிருக்கும் நரம்பு விதை முதலியவைகளை நீக்கிவிட்டுப் பிளானல் அல்லது லினன் (நார் துணி) பைகளிலிட்டு பிரஸ்களிலாவது கொடுத்து அமுக்கு வதால் வெளிவரும் பழச்சாற்றை ஒரு பாத்தி ரத்தில் சேகரித்துக் கொள்ளவேண்டும்.

குறிப்பு:—ஷர்பத்துகள் நெடுநாட்கள் கெடா திருக்க அவைகளை அதிக சூடும் அதிக குளிர்ச்சி யும் இல்லாத இடங்களில் வைக்கவேண்டும். சாதா ரணமாய் 55 டிகிரி (பாரின் ஹீட்) க்கு மேல் சூடேருத ஸ்தானங்களில் காற்று நுழையாமல் மூடப்பட்ட பாத்திரங்களில் வைக்கவேண்டும். பெரிய பாத்திரங்கள் சிலவற்றில் வைப்பதைவிடச் சிறிய பாத்திரங்கள் பலவற்றில் வைப்பது நலம். ஏனென்ருல் பெரிய பாத்திரங்களில் வைத்திருப்ப தால் வேண்டியபோது பாத்திரத்தைத் திறந்து எடுக்கும்போது வெளிக்காற்று பலதடவை ஷர்பத் தில் சம்பந்தப்பட இடமிருக்கிறது.

ஷர்பத்துகள் சூடாக இருக்கும்போதே சீசாக் களிலிட்டு அடைப்புக்களால் வாயை நன்ருக மூடி,

காற்று நுழையாத பைகளிலிட்டுக் கட்டிப்போட்டு விட்டால் பல வருஷங்களுக்குக் கெடாமல் இருக்கும்.

---

## சந்தன ஷர்பத்

இரண்டு பங்கு சந்தனத்தூளிற் பதினாறு பங்கு தண்ணீர் விட்டு நான்கு பங்காகச் சுண்டவைத்து வடிகட்டி அதன் எடைக்கு மூன்றுபங்கு கற்கண்டு சேர்த்துக் காய்ச்சி மதுபாகத்தில் வடிகட்டிக் கொண்டு அதில் தேவையான பன்னீர் விட்டுக் கலந்துகொள்ளவும். இதை மூலச்சூடு, பிரமேகம், சுரம் முதலியவைகளுக்கு வேளைக்கு ஒரு ரூபா யெடை கொடுத்து வரலாம்.

---

## யுநானி முறை

முற்றின இரண்டுபலச் சந்தனத்தூளைப் பத்து பலத் தண்ணீரில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் காய்ச்சி நான்கு பலம் நீர் வற்றினபின் வடிகட்டி அதனோடு 1½ பங்கு கற்கண்டையும் இரண்டு பலம் பன்னீரையுஞ் சேர்த்துக் காய்ச்சி மேற்சொல்லிய பதத்தி லிறக்கிச் சீசாவி லடைத்துக்கொண்டு இரண்டு ரூபாயெடை வீதம் தண்ணீரிற் கலந்து சாப்பிட்டுவர மூலச்சூடு, பிரமேகந் தீரும்.

---

## இந்துஸ்தான் முறை

வெள்ளைச்சந்தனம் பலம் 3-ஐப் பன்னீர் பலம் 12-ல் நான்கு ஜாமம் ஊறவைத்துச் சற்றுக்

கொதிப்பித்துப் பிசைந்து வடிகட்டி இதில் வெள்ளைச்சர்க்கரை பலம் 1 இட்டுப் பதமா யிறக்கி ஒரு தோலா பருக இருதயம் பலம் பெறும்; பைத்தியம், வயிற்றுச் சூடு, தாகம் முதலியன தீரும்.

---

## நன்னாரிவேர் ஷர்பத்

ஒரு பலம் இடித்த நன்னாரிவேரை ஐந்து பலம் கொதிக்கக் காய்ந்த வெந்நீரிலிட்டு நான்கு மணி நேரம் ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டி ஏழு பலம் சர்க்கரை சேர்த்து அடுப்பிலேற்றிப் பாகுபதம் கண்டு, இறக்கிச் சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

---

## வேறு முறை

$12\frac{1}{2}$-பலம் நன்னாரிவேரை யிடித்து $1\frac{1}{2}$-படி வெந்நீரில் ஆறுமணி நேரம் ஊறவைத்து வடிகட்டி அடுப்பேற்றி முக்காற்படியாய் வற்றவைத்து வடிகட்டி $12\frac{1}{2}$-பலம் சீனியைக் கரைத்துக் காய்ச்சி ஒரு துளி எடுத்துவிரலா லழுத்திப் பார்க்கப் பிசின் போலிருந்தால் அந்தப் பதத்தில் சீசாவி லடைத்துக் கொண்டு இரண்டு ரூபாயெடை ஷர்பத்தில் நாலு ரூபாயெடை தண்ணீர் கலந்து சாப்பிட்டுவர மேக காங்கை, பிரமேகம், நீர்க்கட்டு, நீர்ப்பணைப்பு, மேக நீர், கைகால் காந்தல், கண்ணெரிவு, நாவரட்சி, தாகம் முதலியன தீரும்; தேகந் தணியும்; மருந்தீடு நீங்கும்.

---

## ரோஜாப்பூ ஷர்பத் என்னும் ஷர்பத்தேகுல் (யுநானி முறை)

குலாப்பூ பலம் 13, 52-பலம் நல்ல ஜலத்தில் இட்டு, 40-பலமாக வடித்து மறுபடியும் 13-பலம் குலாப்பூ இட்டுக் காய்ச்சி 24-பலம் ஆக வடித்து மறுபடியும் 13-பலம் பூ விட்டுக் காய்ச்சி 13-பலமாக இறுகக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டிக் கொண்டு இதில் வெள்ளைச்சர்க்கரை பலம் 13 இட்டுக் காய்ச்சிப் பதமா யிறக்கி ஒருபலம் சோம்பு கியாழத்தில் கொள்ள மலபந்தம், பித்தம் வயிற்றுச் சூடு தீரும்.

---

## வேறு முறை

பதினெட்டு ரூபாயெடை உலர்ந்த ரோஜா புஷ்பத்தை ஒரு படி வெந்நீரில் 12-மணி நேரம் ஊற வைத்து வடிகட்டி அதில் 180-ரூபா நிறைசர்க்கரை சேர்த்துக் காய்ச்சிப் பதத்திலிறக்கி வடிகட்டிக் கொள்ளவும். பிறகு ஒரு பலம் பன்னீரைச் சேர்த்துக்கொள்ளவும். இதை மலபந்தம், நீர்க்கட்டு, உஷ்ணம், மூலச்சூடு இவைகளுக்கு 1-2 துலாம் நிறை கொடுக்கலாம்.

---

## மாதுளம்பழ ஷர்பத்

மாதுளம்பழ ரசயெடைக்கு ஒன்றரைப் பங்கு சீனி கலந்து காய்ச்சிப் பாகுசெய்து புட்டியிலடைத்துக் கொண்டு சாப்பிட்டுவரப் பித்தம் நீங்கும்.

---

## தாமரைப்பூ ஷர்பத்

வெள்ளைத் தாமரைப்பூ உலர்ந்ததாகவிருந்தால் ராத்தல் 1, பச்சையாக விருந்தால் ராத்தல் 4, இதில் இரண்டு ராத்தல் ஜலம் விட்டு வேகவைத்து மூன்றி லொன்ருக வடித்து வெள்ளைச் சர்க்கரை பலம் 20-இட்டுப் பதமாய்க் காய்ச்சி அரைப்பலம் வீதம் பருக, தலைநோய், பித்தக் காய்ச்சல், பக்க நோய், வயிற்றுநோய் இவைகள் தீரும்.

---

## வேறு முறை

உலர்ந்த தாமரை யிதழ்கள் 10-ரூபா யெடை நிறுத்தெடுத்து முக்காற்படி வென்னீரிற் போட்டு 12 மணி நேரம் ஊற வைத்து வடிகட்டிக்கொண்டு திரும்பவும் அடுப்பிலேற்றிக் கால்படியாகச் சுண்ட வைத்து அதில் 100-ரூபா யெடை சீனி கலந்து காய்ச்சி ஒரு துளியை விரலால் தொட்டுப் பார்க்கையில் பிசின்போல் வரும் பதத்தில் இறக்கிச் சீசாவிலடைத்துக் கொண்டு வேண்டியபோது 1-ரூபாயெடை ஷர்பத்தில் 2-ரூபா யெடை தண்ணீர் கலந்து சாப்பிடவும். மேக அழல், சூடு, தேக எரிவு இவை தீரும்.

---

## நாரத்தம்பழ ஷர்பத்

நாரத்தம்பழ ரசத்தி னெடைக்கு இரட்டிப்பு சீனி கலந்து காய்ச்சிப் பதத்தில் சீசாவி லடைத்துச் சாப்பிட்டு வந்தால் பித்தம் தணியும்.

---

## திராட்சைப்பழ ஷர்பத்

திராட்சைப்பழ ரசம் ஒரு பங்குக்கு இரண்டு பங்கு சர்க்கரை சேர்த்து அடுப்பேற்றி முறைப்படி பதம் கண்டிறக்கிக் கடைசியில் கொஞ்சம் பன்னீர் சேர்த்துக் கொள்ளவும். இதைப் பித்தசூடு, கைகால் எரிவு இவைகளுக்கு உபயோகிக்கலாம். மாத்திரை 1-2 ரூபாய் நிறை கொடுக்கலாம்.

---

## யுநானி முறை

திராட்சைப் பழத்தைச் சாறு பிழிந்து வடிகட்டிக் கொண்டு அதற்குச் சரியெடை சீனியாவது, கற்கண்டாவது சேர்த்து இரண்டரை பலம் பன்னீர் விட்டுக் காய்ச்சி மேலே சொல்லிய பாகுபதத்திலிறக்கிச் சீசாவிலடைத்துக்கொண்டு மூன்று ரூபாயெடை ஷர்பத்தை ஆறு ரூபா யெடை தண்ணீரிற் கலந்து சாப்பிட்டு வந்தால் பித்தசூடும், கைகாலெரிவுந் தீரும்.

---

## கொமட்டி மாதுளம்பழ ஷர்பத்

கொமட்டி மாதுளையை மேற்றோல் நீக்கி இடித்துச் சாறு பிழிந்து அந்த நிறைக்கு முக்காலேயரைக் காலளவு சீனியாவது கற்கண்டாவது கலந்து காய்ச்சிப் பாகுபதத்திற் புட்டியி லடைத்துக்கொண்டு ஒரு ரூபா யெடையில் இரண்டு ரூபாயெடை தண்ணீர் கலந்து சாப்பிட்டுவரப் பித்தமும் பித்தசூடும் நீங்கும்.

---

## ரோஸ் ஷர்பத்

3 இராத்தல் சீனு கற்கண்டு, ½ இராத்தல் சுத்த ஜலம் இவை இரண்டையும் ஒரு சுத்தமும் அகலமுமான பாத்திரத்தில் போட்டு, அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பொங்கிவரும்போது ½ இராத்தல் பசுப் பாலை அதில் ஊற்றியவுடன் பொங்குதல் அடங்கிப் போய் அழுக்கு மேலே படர்ந்து நிற்கும். அதை அகப்பையால் அப்படிப் படர்ந்து நிற்கும் வரையில் இரண்டு மூன்று தரம் எடுத்துப்போட்டு, அடுப்பிலிருக்கும்போதே சிறிது தண்ணீர் விட்டுச் சந்தனம் போலரைத்த ஒரு ரூபாய் எடைக் குங்குமப் பூவையும், இரண்டு ராத்தல் முதல்தரமான ரோஸ் பன்னீரையும் இரண்டு ராத்தல் சுத்த ஜலத்தையும் கலந்து மேற்கண்ட ஷர்பத்தில் கலக்கிச் சாதாரணமான அனல் போட்டு நன்ருய்க் கொதித்தபின் இறக்கி வடிகட்டி ஒரு சுத்தமான புட்டியில் ஊற்றிக் காற்று உட்செல்லாமல் நன்ருய் மூடி வைக்கவும். இதைத் தமக்கு இஷ்டமான நேரம் 2-அவுன்ஸ் ஷர்பத்தில் 6-அவுன்ஸ் பசுப்பால் சேர்த்துச் சாப்பிடவும். பாலில்லாவிட்டால் சுத்த ஜலம் உபயோகித்துக் கொள்ளவும்.

---

## பாதாம் ஷர்பத்

அரைத் தோலா அகிற் கட்டையில் ஆழாக்கு கியாழம் வடித்துக்கொண்டு, 4 பலம் பாதம் பருப்பை ஜலம் விட்டரைத்து ¼ படி பாலாக்கி

அதையும் $\frac{1}{2}$ வீசைச் சர்க்கரையையும் கியாழத்திற் கலந்து பதமாய்க் காய்ச்சி இறக்கும் சமயத்தில் பன்னீர் 2-பலமும், பாலிலிழைத்த குங்குமப்பூ $\frac{1}{8}$ வராகனெடையும் சேர்த்துப் பதம்செய்து புட்டியில் வைத்துக்கொண்டு, அதில் $1\frac{1}{4}$ தோலாவை 2 பலம் சுத்த ஜலத்திற் கலந்து சாப்பிட, நாபிரணம், கொதிப்பு, சூடு, வாய் ரணம் இவை நீங்கும்.

---

## எலுமிச்சம்பழ ஷர்பத் (யுநானி முறை)

எலுமிச்சம் பழ ரசம் ஒரு பங்கு, கற்கண்டு அல்லது சர்க்கரை மூன்று பங்கு இவைகளைச் சேர்த்துக் காய்ச்சிப் பதமறிந்து வடித்துக்கொள்ளவும். மாத்திரை 1-2 உச்சிக் கரண்டி அளவு கொடுக்கலாம். எலுமிச்சம்பழத்தை ரசம் பிழிவதற்கு முன் வெந்நீரிலிட்டுக் கொஞ்சநேரம் வைத்து எடுத்துக்கொண்டால் அல்லது தோலை உரித்துவிட்டுக் கழுவி ரசத்தைப் பிழிந்துகொண்டால் ஷர்பத்தில் கசப்பு இராது. இது அனுபோக முறை.

---

## வேறு முறை

தேறின எலுமிச்சம்பழ ரசத்தினெடைக்கு 2 பங்கு அல்லது இரண்டரைப் பங்கு சீனியாவது கற்கண்டாவது கலந்து காய்ச்சிப் பாகு பதத்தில் சீசாவில் அடைத்துக்கொண்டு முன் எடைப்படி சாப்பிட்டு வந்தால் பித்தம் தீரும்.

---

## வெற்றிலை ஷர்பத் (யுநானி முறை)

இருநூறு வெற்றிலைகளைச் சற்று நசுக்கி இரண்டு ராத்தல் ஜலம் விட்டு மூன்றிலொன்ருகக் கியாழம் வடித்து வெள்ளைச் சர்க்கரை பலம் 6 இட்டுப் பாகு பதத்தில் குங்குமப்பூ, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வெள்ளை ஏலக்காயரிசி வகைக்குத் தோலா ½, லவங்கம் தோலா ¼ இவைகளைப் பன்னீரில் அரைத்துக் கூட்டி இறக்கிக்கொண்டு ½ தோலா விதம் பருக, தாதுபுஷ்டியும், இரத்த சுத்தமும் உண்டாகும்.

---

## கற்கண்டு ஷர்பத்

ஒன்பது இராத்தல் சுத்தமான கிரேப் சீனியில் 24 அவுன்ஸுகள் கொள்ளும் இரண்டு புட்டி சுத்த ஜலம் ஊற்றிக் கலக்கி அடுப்பிலேற்றி, பொங்கி வரும்போது அரைப்புட்டிப் பாலை ஒரு புட்டித் தண்ணீருடன் கலந்து அதில் தெளித்துக் கொதி அடங்கியபின் அதன்மேல் படர்ந்திருக்கும் அழுக்கை அகப்பையால் அகற்றிவிட்டு இவ்விதம் பொங்கி வரும்போதெல்லாம், இந்தப் பால் நீரைத் தெளித்து அழுக்குகளை முற்றிலும் போக்கி, அரைப்புட்டி உயர்ந்த பன்னீரை அதில் ஊற்றி இருவிரல்களால் தொட்டுப் பார்க்கும்போது, 1½-அல்லது 2-நூல் தடிப்பாய்க் காணப்படும் வரையில் காய்ச்சி, இறக்கி ஆறவைத்து, சுத்தமான ஒரு புட்டியில் ஊற்றி நன்ருய் மூடி வைத்துக்கொள்ளவும்.

---

## உன்னுப் என்னும்
## சீமை இலந்தைப்பழ ஷர்பத்

உன்னுப் பலம் 8, 32-பலம் ஜலத்திலிட்டு வேக வைத்துப் பிசைந்து 24-பலமாக எடுத்துத் திப்பியை நீக்கி வெள்ளைச்சர்க்கரை பலம் 16 இட்டுப் பதமாய்க் காய்ச்சி எடுக்கவும். ஒரு தோலா நல்ல ஜலத்தில் புசிக்கப் பித்தம், மயக்கம், கிறுகிறுப்பு தீரும்.

---

## துரிஞ்சிப்பழ ஷர்பத்

துரிஞ்சிப்பழத்தி னுள்சுளையின் ரசம் பலம் 7-உடன் வெள்ளைச் சர்க்கரை பலம் 20 சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி இறக்கும் சமயம் குங்குமப்பூ வராகனெடை வீசம் நல்ல ஜலத்தி லிழைத்து அதி லிட்டுக் கலக்கி வைத்துக்கொண்டு வேளைக்கு 1½-தோலா பருக, உஷ்ணபேதி, பித்தம், கிறுகிறுப்பு, எரிவு, அரோசிகம் இவை தீரும்.

---

## தாழம் விழுது ஷர்பத்

தாழம் விழுதின் ரசத்தை முறித்து வடித்துப் பலம் 13 எடுத்து அதில் வெள்ளைச்சர்க்கரை பலம் 20 இட்டுப் பதமாய்க் காய்ச்சி வைத்துக்கொண்டு வேண்டும் சமயம் ஒரு எலுமிச்சம்பழ ரசம் விட்டுக் கொண்டு ஒன்றரை அல்லது இரண்டு தோலா வரையில் நல்ல ஜலத்தில் புசிக்கக் கொதிப்பு, பித்தம் இவைகள் சாந்தமாகும்.

---

## ககருபா ஷர்பத்

நன்னாரிவேர், நாகமரத்தின் சல்லிவேர், அத்திப்பட்டை, மகிழ மரப்பட்டை, ஆலம் விழுதின் நுனிகள், கொட்டைக் கரந்தைப் பூ, கோரைக் கிழங்கு வகைக்குப் பலம் 3. இவைகளை நைய நறுக்கி, ஒரு படி ஜலத்தில் ஒரு நாள் ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டிக்கொண்டு அதில் 50 பலம் சீனிக் கற்கண்டு இட்டு அழுக்கை நீக்கி ஒன்றரை தோலா ககருபாவை 5 பலம் பன்னீரி லரைத்து அதிற் கலந்து பதமாய்க் காய்ச்சி இறக்கிக்கொண்டு வேளைக்கு 2 தோலா நல்ல ஜலத்தில் கலந்து நாள் ஒன்றுக்கு மூன்று தரம் சாப்பிட, சூடு, காந்தல் தீர்ந்து இரத்த விருத்தி யுண்டாகும்.

---

## நவாபுகள் தாஜா ஷர்பத்

| | | |
|---|---|---|
| பச்சைக் காசினிவேர் | தோலா | 4 |
| காசினி விதை | | 2 |
| ரோஜாப்பூ | | 2 |
| தாமரைப்பூ | | 1 |
| காவுஜபான் | | 1 |
| தொச்மேகஷ் ஒஷ் | | $1\frac{1}{2}$ |

இவைகளைக் கியாழம் வடித்து 18-பலம் சர்க்கரையிட்டுக் காய்ச்சி வேளைக்கு 1 பலம் கொடுக்க, உஷ்ணக்காய்ச்சல், குடல்பை மெதுவு, மலக்கட்டு, வீக்கம், பக்கநோய், ஈரல்நோய், வயிற்றுநோய், நீர்ப்பைச்சூடு, கர்ப்பச்சூடு, நீரடைப்பு முதலியன தீரும்.

---

## காசினியிலை ஷர்பத்

காய்ச்சி வடிகட்டிய காசினியிலை ரசம் பலம் 13-ல் வெள்ளைச்சர்க்கரை பலம்-20 இட்டுக் காய்ச்சிப் பதமா யிறக்கி இரண்டு தோலா நல்ல ஜலத்தில் பருக, நீர்க்கட்டு, நீர் எரிவு, உட்காய்ச்சல் இவை தீரும். மலம் இளகும். இருதயம் பலமடையும்.

---

## இஞ்சி ஷர்பத்

ஆறேகால் ரூபாயெடை இஞ்சியைத் துண்டு துண்டாய் நறுக்கி மூன்ருழாக்கு சுடுதண்ணீரில் நான்கு மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி 75-ரூபாயெடைச் சர்க்கரையைக் கரைத்துப் பாகு செய்து புட்டியி லடைத்துக்கொண்டு சாப்பிடவும்.

---

## சுகுணவிரேசன ஷர்பத்

ஆல்பகடா பழம் 15, சிறு வெள்ளரிக்காய் 60, சீமை இலந்தப்பழம் 30, சுத்தி செய்த சக்முனியா பலம் அரை, நிலாவிரை பலம் முக்கால், குலாப்பூ, பனப்ஷா, காவுஜபான்பு, தாமரைப்பூ, பெருங்கீரைக்கா விரை, சிறுகீரைக்கா விரை, காசினிவிரை வகைக்குத் தோலா 2, இவைகளை 5 பலம் தாமரைப் பூ கியாழத்தி லிட்டு வேகவைத்துப் பிசைந்து வடித்து அதில் வெள்ளைச் சர்க்கரை பலம் 20 இட்டுப் பாகுபதமாய்க் காய்ச்சி வைத்துக்கொண்டு காலையில் ஒன்றரைத் தோலா வீதமாக மூன்றுநாள் புசிக்கவும்.

---

# எஸ்ஸென்ஸ்

## விக்டோரியா எஸ்ஸென்ஸ்

½-ரூபா எடை உயர்ந்த ரோஸ் அத்தர்
½-ரூபா எடை வைலி நிரோலி (Vile Niroli)
4-அவுன்ஸ் வைலி பார்க்மோட் (Vile Burgamotoe)
24-துளி அற்று பைமென்ட் (Attu Piment)
16 ,, லவன்டர் (Lavander)
2-அவுன்ஸ் எஸ்ஸென்ஸ் ஜஸ்மீன் (Essence Jasamine)
16 ,, டின்ச்சர் ஓரீஸ் (Tincture Oris)
2 ,, எஸ்ஸென்ஸ் மஸ்க் (Essence Musk)
4 ,, ஆரஞ்சி பிளவர் வாட்டர் (Orange Flower Water)
4-பயின்ட் ரெக்டிபைட் ஸ்பிரிட் (RectifiedSpirit)

மேல்காட்டிய மருந்துகளை எல்லாம் ரெக்டிபைட் (Rectified Spirit) ஸ்பிரிட்டில் ஒன்ருய்ச் சேர்த்துக் கலக்கிச் சுத்தமான புட்டியில் ஊற்றிக் காற்று உட்செல்லாமல் மூடி வைத்துக்கொண்டு, இஷ்டமான நேரம் உபயோகிக்கலாம். இதன் பரிமளம் மன உற்சாகத்தை எழுப்பும்.

இது இங்கிலாந்து முதலிய மேல்நாடுகளில் பெரிதும் போற்றப்படுகிறது.

## எஸ்ஸென்ஸ் மஷ்க் ரோஸ்

2 டிராம் ஆட்டோடி ரோஸ்
2 ,, உயர்ந்த சந்தன அத்தர்
12 அவுன்ஸ் எஸ்ஸென்ஸ் மஸ்க்
4 ,, எஸ்ஸென்ஸ் வெனீலா
2 ,, டின்சர் ஓரீஸ்
4 ,, எஸ்ஸென்ஸ் ஜஸ்மீன்
4 ,, திறமான பன்னீர்
4 ப்யின்ட் ரெக்டிபைட் ஸ்பிரிட்
போதுமான அளவு மாக்னீசியாகார்ப்

இவைகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு புட்டியில் ஊற்றி நன்ருகக் குலுக்கி, வாசனை வெளியே சென்றுவிடாமல் மூடி வைத்துக்கொள்ளவும். இது மிகவும் அருமையான மணம் வீசுவது.

---

## லெமனட் செய்தல்

சீனி 1¾-ரூபா எடை, சோடாத்தூள் ¼-ரூபா எடை இவ்விரண்டையும் 6-அவுன்ஸ் சுத்த ஜலத்தில் நன்ருய்க் கலக்கி வடிகட்டிக்கொள்ள வேண்டும். அதன்பின் இதில் லெமன்வயல் 3-துளியும், சயிடிரிக் ஆசிட் ¼-ரூபா எடையும் சேர்த்து ஒரு கல்கார்க்கு புட்டியி லூற்றி மூடிச் சிறிது நேரம் பொறுத்து எடுத்துக்கொள்ளவும்.

---

# பல்பொடி

## பெண்கள் பல்பொடி

| | பலம் |
|---|---|
| விபூதிபோல் வறுத்த நாட்டுக்கல்நார் தூள் | 2 |
| வெள்ளைக் குங்கிலியத்தூள் | 2 |
| மாசிக்காய்த்தூள் | 1 |
| கிச்சிலிக் கிழங்குத்தூள் | 1 |
| சாம்பிராணித்தூள் | 1 |
| ஏலரிசித்தூள் | 1 |
| சுக்குத்தூள் | 1 |

இவைகள் யாவும் ஒன்ருய்க் கலந்து சீசாவில் வைத்துக் கொள்ளவும். வேண்டியபோது பல் துலக்கிக் கொண்டு வெந்நீரில் வாய் கொப்பளிக்கவும்.

---

## வேறு முறை

| | பலம் |
|---|---|
| நன்ருய் வெளுக்கும்படி வறுத்த அன்னபேதித்தூள் | 3 |
| நன்ருய் வெளுக்கும்படி வறுத்த மயில்துத்தத்தூள் | 3 |
| காய்ச்சுக்கட்டித்தூள் | 1 |
| அக்காரகாரம் | 1 |
| மிளகுத்தூள் | 1 |

இவைகளைக் கலுவத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைத்துக் காலணு அளவுக்குப் பில்லைகள் செய்து உலர்த்திச் சீசாவில் வைத்துக்கொள்ள

வும். வேண்டியபோது 2-பில்லைகள் எடுத்துப் பொடி செய்து பல் துலக்கி வெந்நீரில் வாய் கொப் புளிக்கவும். இப்படி காலை மாலை 4, 5 நாட்கள் துலக்கினால் பல் அசைவு, பல் ஆட்டம், ஈறுகள் வீக்கம், வாய் நாற்றம் யாவுந் தீரும்.

---

## ஆயுர்வேத பல்பொடி

| | பலம் |
|---|---|
| விதை நீக்கி வறுத்திடித்த கடுக்காய்த்தூள் | 1 |
| விதை நீக்கி வறுத்திடித்த புங்கங் கொட்டைத்தூள் | 1 |
| விதை நீக்கி வறுத்திடித்த சீக்காய்த்தூள் | 1 |
| வறுத்திடித்த மிளகுத்தூள் | 1 |
| சுக்குத்தூள் | 1 |
| லவங்கத்தூள் | 1 |
| ஏலரிசித்தூள் | 1 |
| அக்கராகாரத்தூள் | 1 |
| வெள்ளைக் குங்கிலியத்தூள் | 1 |
| இந்துப்பு | 1 |
| விபூதிபோல் வறுத்த சோற்றுப்புத்தூள் | 5 |

இவைகள் யாவும் ஒன்றாய்க் கலந்து நன்றாய் கலக்கிச் சீசாவில் வைத்துக்கொள்ளவும். பல் நோயுள்ளவர்கள் காலை மாலை இந்தப் பொடியினால் துலக்கி வெந்நீரில் வாய் கொப்பளிக்கவும். இந்தப் பொடியைப் பிரதிதினம் துலக்கிவந்தால் ஆயுட் காலம் வரை பல்நோய் வாராது.

---

# கர்ப்பூரம்

கர்ப்பூரம் சன்னலவங்கப்பட்டை (Cinnamon) மரத்திலிருந்தும் டைரோபல்நாப்ஸ் என்னும் மரத்திலிருந்தும்தான் முக்கியமாக எடுக்கப்படுகின்றது. சன்ன லவங்கப்பட்டை மரமானது சைனுவிலும், ஜப்பானிலும், பர்மோஸாவிலும், அதிகமாக இந்தியாவிலும் பயிராகி வருகின்றது. டைரோபல் நாப்ஸ் என்னும் மரம் டச்சுக்காரர்களின் ஸ்வாதீனமான சுமத்திரா தீவிலும், வடபோர்னியாவிலும், லபூகானிலும் இருக்கின்றது. கர்ப்பூரம் சன்ன லவங்கப்பட்டையிலிருந்து சூரிய வெப்பத்தினுல் தயாரிக்கப்படுவதினுல் அதற்கு "பக்வ" எனவும், டைரோபல் நாப்ஸ் என்னும் மரத்திலிருந்து எடுக்கப்படும் கர்ப்பூரத்திற்கு 'அபக்வ' எனவும் பெயர் வழங்குகிறது. பக்வ என்று சொல்லப்படும் கர்ப்பூரமே மிகவும் சிறந்தது. இரண்டாவதான அபக்வ என்னும் கர்ப்பூரம் கர்ப்பூரஜலம் செய்வதற்கே உபயோகமானது.

---

## பக்குவமாகாத கர்ப்பூரம்

ஜாப்பானியர்களும், சீனர்களும் சன்ன லவங்கப்பட்டைச் செடியைச் சிறு துண்டுகளாக நன்ருய் அறுத்துப் பெரிய இருப்புப் பாத்திரங்களில் போட்டுக் கும்மட்டிப் பாத்திரங்களாலும் வைக்கோலாலும் நன்ருக இறுக மூடிக் காய்ச்சுகிருர்கள். நன்ருய்க் கொதிக்கும்பொழுது கர்ப்பூரம் ஆவியுடன் ஆவியாக மாறி வைக்கோலின்மேல் சுருங்கித் தங்கிவிடுகிறது.

டைரோபல்நாப்ஸ் மரத்தின் அடிப் பாகத்தில் அநேக விதமான மரப்பாகங்கள் இருக்கின்றன. மரத்தின் முக்கியப் பாகங்களில் பளிங்குபோன்ற கர்ப்பூரமும், கிளைகள் முளைத்திருக்கும் அடிப்பாகங்களிலிருந்து வெள்ளைக் கர்ப்பூரமும் காணப்படுகின்றன. கர்ப்பூரத்தைச் சேகரிப்பதற்கு முன் மாதிரியாகவே மரத்தைத் துண்டுதுண்டாக வெட்டி நன்ருகக் காய்ச்சவேண்டும். இந்தக் கர்ப்பூரமானது சாதாரண கர்ப்பூரத்தைவிட 40 அல்லது 50 மடங்கு மிகவும் மேலானதெனக் கொள்ளப் படுகிறது. டைரோபல்நாப்ஸ் மரம் சுமார் 11 பவுண்டு கர்ப்பூரத்தைக் கொடுக்கிறதென்று நிபுணர்கள் கணக்கு எடுத்திருக்கிருர்கள்.

---

## கர்ப்பூரத்தைச் சுத்தி செய்யும் விதம்

பக்குவமாகாத 50 பங்கு கர்ப்பூரத்தை 1 பங்கு சுண்ணும்புடனும் 1 பங்கு மிருகக் கரியுடனும் நன்ருய்ப் பவுடராகச்செய்து அந்தக் கலப்பும் பவுடரை ஒரு மெல்லிய கிளாஸ் பாத்திரத்தில் போட்டுக்கண்ணுடித் தொட்டியில் வைத்துச் சூடாக்கவும். பாத்திரய் சூடேற்றிக்கொண்டு வரும்பொழுதே பாத்திரத்திலுள்ள பவுடரும் சுத்தியாகிக்கொண்டே வரும். பவுடர் சுத்தியானதும் பாத்திரத்தைக் கொஞ்ச நேரம் தனியாக எடுத்து ஆறவைக்கவேண்டும். இந்தமாதிரியாகத்தான் கர்ப்பூரத்தைச் சுத்தி செய்யவேண்டும்.

---

# கப்பு எண்ணெய்கள்

## நரை மயிரைக் கருப்பாக்கும் எண்ணெய்

| | | |
|---|---|---|
| கருப்பு வரட்பூலாப் பழம் | வீசை | 5 |
| வெள்ளைத் தாமரையிதழ் | ,, | 8 |
| கோரோசனம் | வராகனெடை | 2½ |
| இந்திரகோபம் | ,, | ,, |

இவைகளை உரலில் போட்டு மயனமாகும்படி இடித்தெடுத்துக்கொண்டு முற்றின நெற்றுத் தேங்காய் 20-கொண்டுவந்து மேல்குடுமிகளை நீக்கிக் கண்களைத் திறந்து அரைவாசித் தண்ணீரைக் கொட்டிவிட்டு அதற்குள் இந்த மருந்தைப் போட்டடைத்து கணுவிருக்கும் மூங்கில் துண்டுகளை அளவாகச் சீவி ஆப்படித்துச் சமைக்கிற வீட்டின் பரணைமேல் நாற்பதுநாள் வைத்து அதன்பிறகு எடுத்து ஒரு காயிலிருக்கும் மருந்துக்கு அரைவீசை நல்லெண்ணெய் கலந்து பழகிய சட்டியில் விட்டு அடுப்பேற்றித் தீயெரிக்கும்போது வெள்ளாட்டு முழங்கால் எலும்பினால் துழாவிக் காய்ச்சிக்கொண்டிருந்தால் அந்த எலும்பின் அடிமூளை கறுக்குமாகில் அதுதான் பதமென்று இறக்கி வடிகட்டிச் சீசாவில் வடித்துக்கொள்ளவும்.

நரைமயிர் கருக்க வேண்டியவர்கள் வாயில் அரிசி போட்டுக்கொண்டு உச்சியில் இந்தத் தைலத்தினால் தேய்க்கவேண்டியது. அரிசிகள் கறுக்குமாகில் தேய்ப்பதை நிறுத்திவிடவும். தலையிலிருக்கும்

மிருதி எண்ணெயைத் துணியினுல் துவட்டிவிட்டு 3-நாள் வரையில் குளிக்காமலிருந்து நாலாவது நாள் சிகைக்காய் அரைத்துக் கஞ்சியில் கலக்கிக் காய்ச்சி ஸ்நானஞ் செய்யவும். இப்படி வாரத்திற்கொரு முறை 4-முறை முழுகினுல் பாலநரை முதலியன வும் கறுப்பாகும். ஸ்திரீபோகம் கூடாது.

---

## வேறு முறை

| | | சேர் |
|---|---|---|
| கறுப்பு வரட்பூவாப்பழம் | | 1 |
| மருதோன்றியிலை | | 1 |
| கடுக்காய்த்தோல் | | 1 |
| தாமரைத்தண்டு | | 1 |
| தான்றிக்காய்த்தோல் | | 1 |
| மருதம்பட்டை | | 1 |
| மஞ்சள் கரிசலாங்கண்ணி | | 1 |
| இரும்பு அரப்பொடி | பலம் | 2½ |
| காய்ச்சுக்கட்டி | பலம் | 3½ |

இவ்வைகள் யாவும் கல்லுரலில் போட்டுப் பஞ்சு போல் நைய நறுக்கி 40-பலம் நல்லெண்ணெயில் போட்டுக் கலக்கி எலுமிச்சம்பழச் சாறு 5-பலம் விட்டுக் கலக்கிக் காய்ச்சி நீர் சுண்டித் தைலபதம் கண்டவுடன் இறக்கிச் சீசாவில் வைத்துக்கொள்ள வும். மாலையில் தைலத்தைத் தடவிக்கொண்டு காலை யில் சோப்பினுல் அலம்பிவிட்டு வேறு வாசனை எண்ணெய்கள் தடவிக்கொள்ளலாம். மயிர்கள் மிகவும் கருப்பாக வளரும்.

---

## சித்தாதி முறை

| | |
|---|---|
| தாழைவிழுதுச் சாறு | படி 1 |
| மஞ்சள் கரிசலாங்கண்ணிச் சாறு | படி 1 |
| குரட்டைப் பழச்சாறு | படி 1 |
| நல்லெண்ணெய் | படி 1½ |
| அரப்பொடி | பலம் 2 |

இவைகள் யாவும் இரும்பு பாத்திரத்தில் இட்டு அதன் வாய்க்கு ஓடு மூடிச் சீலைமண் ஏழு செய்து பூமிக்குள் புதைத்து ஒரு மண்டலம் பொறுத் தெடுத்துச் சிரசுக்கிட்டு ஸ்நானம் செய்து வந்தால் நரை மயிர் கருக்கும்; கண் துலங்கும்; பித்த சாந்தியாகும்.

---

## யுநானி முறை

| | |
|---|---|
| முதல்தரம் மட்டுப்பால் | பலம் 4 |
| ஜெயித்தூன் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் | ,, 18 |

இவைகளைக் கரைத்து ஒரு நாள் வைத்திருந்து மறுநாள் கரி நெருப்பின்மேல் வைத்து 1-மணி நேரம் காய்ந்தவுடன் புட்டியில் அடைத்துக் காற்றுப் புகாமல் வைத்துக் கொள்ளவும். தலைவலிக்கு ஒரு துளி கன்னப் பொறிகளில் தடவினால் தீரும்; பசியில்லாதவர்களுக்கு வயிற்றில் பூசினால் பசியுண்டாகும்; பிரதி தினம் தலையில் பூசி வந்தால் நரை மயிர் கருக்கும்.

---

# பஸ்பங்கள்

## கப்பு பஸ்பம்

மிருதார்சிங்கித்தூள் 1-பங்கும்
கல்சுண்ணும்புத்தூள் 2-பங்கும்

கல்வத்திலிட்டு நன்ருய்க் கலக்கி வீட்டில் உபயோகப்படுத்தும் சுண்ணும்பில் சுழற்சிக்காயளவு எடுத்து ஒரு கையளவு நல்ல ஜலம்விட்டுக் கரைத்துச் சற்று நேரம் வைத்திருந்து கலங்கலை நிறுத்திவிட்டு தெளிவை மாத்திரம் எடுத்துக்கொண்டு அதனுல் ஷை பஸ்பத்தைச் சற்றுக் கனமாகக் குழைத்து மீசை, தாடி முதலிய நரைத்த பாகங்களில் தடவி இளவாழையிலையாவது வெற்றிலையாவது வைத்து மெல்லிய சீலையால் கட்ட வேண்டியது.

இரவில் படுக்கும்போது கட்டிக்கொண்டு காலையில் அவிழ்த்து நல்ல ஜலத்தால் அலம்பிவிடவும். மாதமொரு முறைசெய்துவர எப்போதுங் கருப்பாகவே யிருக்கும்.

---

## ரோமசங்காரி பஸ்பம்

கோழிமுட்டை ஓட்டின்தூள் கால்பங்கு
தாளகத்தூள் கால்பங்கு
கிளிஞ்சில் சுண்ணும்புத்தூள் இரண்டுபங்கு

இவை யாவும் ஒன்ருய்க் கலந்து புட்டியில் வைத்துக்கொள்ளவும். தேவையானபோது கொஞ்சம் எடுத்துத்தண்ணீர்விட்டுச் சந்தனம்போல் குழைத்து மயிர் வேண்டாத இடத்தில் தடவி 5-நிமிஷம் பொறுத்துக் கத்தியினுலாவது பனையோலையினுலாவது வழிக்கவும்.

---

## சுகஜன்னிக்குப் பிரமாஸ்திரப் பொடி

செவ்வியம், சிறுநாகப்பூ, சண்பகமொக்கு, செம்புராம்பட்டை, சிறுதேக்கு, குறுவேர், நன்னாரி வேர், வெட்டிவேர், கஸ்தூரி மஞ்சள், கோரைக் கிழங்கு, கோஷ்டம், ஜடாமாஞ்சில், கிச்சிலிக் கிழங்கு, பச்சிலை, கருஞ்சீரகம், கார்போகரிசி, சிற்றுமுட்டி, வேப்பம்பட்டை, நாணவேர், கொம் பரக்கு வகைக்கு 1-பலம்,

| | |
|---|---|
| மலாக்கா சந்தனத்தூள் | 5-பலம் |
| பளிங்கு சாம்பிராணி | 5-பலம் |

இவைகளை உலர்த்தி இடித்து (வஸ்திரகாயஞ் செய்யக்கூடாது) இரும்புக்கம்பி ஜல்லடையில் ஜல்லித்தோ முறத்தில் தெள்ளியோ கதம்பப் பொடி போலாக்கிச் சீசாவில் வைத்துக்கொள்ளவும்.

சுகஜன்னியா லுண்டாகும் ஒற்றைத் தலை நோய், இரட்டைத் தலைநோய், கழுத்துநோய், புற வலி, சீதளம், உடம்பு சிலிர்ப்பு, சயித்தியம், பல்வலி இவ்வியாதி யுடையோர் சுமார் 2-பலம் நல்லெண் ணெய் இருப்புக் கரண்டியில் விட்டு நெருப்பில் காட்டி முறியாமல் பதமாய்க் காய்ச்சி எடுத்து அதில் இந்தப் பிரமாஸ்திரப்பொடி 2-3 சிட்டிகை போட்டால் சற்றுப் பொங்கி யடங்கும். போது மான சுடுகையா யிருக்கும்போதே சிரசிற்கும் கழுத்து முதுகு கைகால் முதலியவைகட்கும் தேய்த்து ஆள்மூலமாய் நன்றாய்ப் பிடித்துத் தேய்த் துத் தனிவெந்நீரில் ஸ்நானம் செய்யவும். அன்றைய தினம் தயிர், மோர், சீதள பதார்த்தம், பகல் நித் திரை, படிப்பு இவையாகா. இப்படி, 4-5 தடவை முழுகினால் ஜன்னி தோஷங்கள் யாவும் நிவர்த்தி யாகும். கைகண்டது.

# தேள் விஷத்திற்கு

ஒரு பலம் வெள்ளைப் பாஷாணம், 2½-வராகனெடை நவாச்சாரம், 1-வராகனெடை கோரோஜனம் இவைகளைக் கலுவத்திலிட்டு எருக்கம்பால் விட்டு அரைத்துக் கயிறுபோல் நீளமாய் மாத்திரைகள் செய்து வைத்துக்கொண்டு வேண்டியபோது இந்த மாத்திரையைத் தண்ணீர்விட் டிழைத்துக் கொட்டிய கடிவாயில் தடவி அனல் காட்ட வேண்டியது. படை நெருப்பின்மீது சாம்பிராணியும் மயிலிறகும் நசுக்கிப் போட்டு அந்தப் புகையை நாசியிலும் முகத்திலும் படும்படிப்பிடிக்க இரண்டொரு நிமிஷத்தில் விஷ மிறங்கும்.

(2)

காட்டுக் காடையைப் பிடித்து அதன் ரோமங்களையும், இறக்கை சிறகு முதலானவைகளையும் எடுத்து அந்த ரோமங்களை சிறு பொடிகளாகக் கத்தரித்துச் சிகரெட்டு சுற்றுவதுபோல் அதே அளவு காகிதத்தில் சுற்றி வைத்துக்கொண்டு தேள் கொட்டியவுடன் இதில் ஒன்றெடுத்துச் சிகரெட்டு பிடிப்பதுபோல் பிடித்து 2, 3 முறை அந்தப் புகையை உள்ளுக்கு விழுங்கினல் உடனே பளிச்சென்று விஷமிறங்கி விடும்.

(3)

நாலாங் காய்ச்சல் வெடி யுப்பு 2-பலம் எடுத்து எருக்கம்பால் விட்டரைத்து ஒரேகட்டியாக 1-பலம் வெள்ளைப் பாஷாணங் கொண்டுவந்து அந்தக் கட்

டிக்கு முன் அரைத்த மருந்தைத் தடவிச் செம்மண் சீலை செய்து அவிப்புடமிட் டெடுத்துக்கொள்ளவும். வேண்டியதுபோது இந்த மருந்தை உமிழ்நீர்விட் டரைத்துத் தேள் கொட்டின விடத்தில் தடவ விஷந் தீரும்.

(4)

கற்றாழைச் சோற்றைப் புன்னைக்காயளவு உள்ளுக்கும் கொடுத்து மேலுக்கும் தேய்க்க தேள் விஷ மிறங்கும.

(5)

நெய்ச்சிட்டி இலையைக் கடிவாயில் தேய்க்கத் தேள் விஷ மிறங்கும்.

(6)

குப்பைமேனி இலையும் கொஞ்சம் உப்புக் கல்லும் வைத்து நறுக்கி, வலது பக்கம் கொட்டினால் இடது காதிலும், இடது பக்கம் கொட்டினால் வலது காதிலும் 2 துளிகள் பிழிய விஷ மிறங்கும்.

(7)

கொம்புத் தேனைக் கடிவாயில் தடவி நன்றாய்த் தேய்க்க விஷ மிறங்கும்.

(8)

சோற்றுப்பைப் பொடித்து மெல்லிய வஸ்திரத்தில் முடிந்து தண்ணீரில் நனைத்து இடதுபக்கம் கொட்டினால் வலது மூக்கிலும் வலது பக்கம் கொட்டினால் இடது மூக்கிலும் 2, 3 துளி விட்டு முகரத் தேள் விஷ மிறங்கும்.

(9)

நவாச்சாரம் சுண்ணும்பும் நசுக்கித் தண்ணீர் விட் டிழைத்துக் கடிவாயிலும் தடவி அதையே உள்ளங் கையிலுந் தடவவும். இடது பக்கம் கொட்டினுல் வலதுமூக்கிலும், வலதுபக்கம் கொட் டினுல் இடது மூக்கிலும், மூகர விஷ மிறங்கும்.

(10)

கோழி மலத்தைப் புளியங்கொட்டை யளவு எடுத்து ஒரு வெற்றிலேயில் மடித்து உள்ளுக்குக் கொடுக்க விஷ மிறங்கும்.

(11)

புளியங்கொட்டை ஒன்றைக் கல்லின்மீது தேய்த்துக் கால் பங்கு தேய்த்தவுடன் அந்தச் சூட் டுடன் கொட்டிய இடத்தில் வைத்தால் பிடித்துக் கொள்ளும். விஷம் இறங்கினு லொழியப் புளியங் கொட்டை விழாது. வெங்காயத்தை நசுக்கி மூகரலாம்.

(12)

நெருப்புக் குச்சியின் முனேயிலிருக்கும் மருந் தும் சுண்ணும்பும் தண்ணீரிலிழைத்துக் கொட்டின இடத்தில் தடவி அனல் காட்ட விஷமிறங்கும்.

# சர்ப்ப விஷத்திற்கு

மிகவும் அனுபோகமான இந்த ஔஷதத்தை யாவருஞ் செய்துவைத்துக்கொண் டிருந்தால் விஷமென்பதற்கு எள்ளளவும் பயப்படவேண்டியதில்லை.

| | | |
|---|---|---|
| வெள்ளைப் பாஷாணம் | வராகனெடை | 1 |
| மனோசிலை | ,, | 1 |
| இரசம் | ,, | 1 |
| நெல்லிக்காய்க் கந்தகம் | ,, | 1 |
| பெருங்காயம் | ,, | 1 |
| வேப்பம் பருப்பு | ,, | 1 |
| துரிசு | ,, | 1 |

ஆகத் தினுசுகள் 7, மொத்தம் வராகனெடை 7-க்கும் சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு வராகனெடை 14, ஆக மொத்தம் 21 வராகனெடையும் கலுவத்தில் போட்டு ஆழாக்கு வெள்ளெருக்கம் பாலைக் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு அரைக்கவும். ஆழாக்குப் பாலும் விட்டு இரண்டு ஜாமம் அரைத்த பிறகு வேப்பெண்ணெய் அரையாழாக்கு விட்டு ஒரு ஜாம மரைக்கவும். மெழுகு பதமாயரைத்து வழித்து எருமைக்கொம்பு டப்பியில் வைத்துக்கொள்ளவும். விஷந்தீண்டி வந்தவர்களுக்கு உளுந்து பிரமாணம் எடுத்து வெற்றிலையில் வைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். இதற்குப் பத்தியம் மோர்சாதம். அன்றிரவு நித்திரை செய்யக்கூடாது.

விஷம் தலைக்கேறிப் பற்கிட்டியிருந்தால் உச்சியில் கீறி அந்தக் கீறலின்மேல் இந்த மருந்தில் உளுந்

தளவு வைத்துச் சூடெழும்பத் தேய்த்துத் திரும்பவும் கொஞ்சம் மருந்து வைத்து வட்டமாக ஓட்டுப் பில்லை நறுக்கி உச்சியில் அழுத்தமாக வைத்துக் கட்டவேண்டியது. உடனே வெந்நீரில் உளுந்தளவு மருந்திழைத்துப் பல்லை நீக்கி உள்ளுக்குச் செலுத்த வேண்டியது. மூன்றே முக்கால் நாழிகையில் மூர்ச்சையானவன்போ லெழுந்திருப்பான். பத்தியம் முன்போலவே செய்யவேண்டும்.

ஆடு மாடு முதலிய மிருகங்களுக்கு:—குன்றி மணியளவு வெற்றிலைச் சாற்றிலாவது வெந்நீரிலாவது இழைத்து மூக்கிற் குழையினால் உள்ளுக்குச் செலுத்த வேண்டியது. குருவையரிசி கஞ்சிக் காய்ச்சிக் கொடுக்கவும்.

## பத்திய விவரம்

முன் கூறியபடி மனிதருக்கு மருந்து கொடுத்த பிறகு 24 மணி நேரம் வரையில் ஆகாரம், தாகம், நித்திரை இவைகள் கூடாது. அதன் பிறகு குருவையரிசிச் சாதம் மிளகுநீர் இவை கொடுக்கலாம. ஆடு மாடு முதலிய மிருகங்களுக்குக்கூட 24 மணி நேரம் வரையில் ஆகாரம் வைக்கோல் தண்ணீர் இவைகள் காட்டக் கூடாது. அதன்பிறகு கருப்புநெல் அல்லது மணக்கத்தை அல்லது குருவையரிசி யெடுத்துக் கஞ்சி காய்ச்சி மாடுகளுக்கு 2-படி கஞ்சிக்கு அதிகப்படாமல் கொடுக்கவும். அதற்குப் பிறகு தாங்கள் வழக்கம்போல் கொடுக்கும் தீனி கொடுக்கலாம்.

## ஷை மருந்து செய்யுங் காலம்

இம்மருந்து செய்யவேண்டியவர்கள் ஆதி வாரத்தில் சகல மருந்தும் தயார் செய்துகொண்டு நடுவாசலைச் சுத்தி செய்து கலுவமும் மருந்துகளும் வைத்துச் சூரியபகவானுக்குத் தேங்காயுடைத்துத் தூபதீபங் கொடுத்து நமஸ்கரித்து ஆகாயத்தைப் பார்த்துக் கருடபகவானை நினைத்து நமஸ்காரஞ் செய்து அரைக்க வேண்டியது. அரைக்கும்போது புளித்த மோரும் கூழும் கரைத்துத் திருப்தியாகச் சாப்பிட்டுவிட்டு அரைக்க வேண்டியது. மேற் கூறிய கணக்குப்படி 3 ஜாமம் அரைத்த பிறகு விளக்கெண்ணெய் தேய்த்துத் தலை முழுகினல் மருந்தின் வேகம் தணியும்.

---

## ஆரோக்கிய கலிக்கம்

வெள்ளை மிளகு பலம் 1, களாப்பூ 100, தும்பைப்பூ 100 முதலில் மிளகை ஒன்றிரண்டாய்த் தட்டி உடைத்துக்கொண்டு ¼-படி நல்லெண்ணெயில் ஷை மிளகையும் பூக்களையும் போட்டுக் கலந்து ஒரு கல்கார்க்குப் புட்டியில் யாவும் ஒன்ருய்விட்டுக் காற்றுப் புகாமல் மூடிப் பூமியில் ஒரு கஜ ஆழத்தில் புதைத்து 40-வது நாள் எடுத்து உபயோகிக்கவும். வெள்ளிக் கம்பியில் அல்லது ஏதாவது குச்சியில் தொட்டுக் கண்களில் தீட்டினல் மிக ஆரோக்கியமா யிருக்கும். சூடு, காசகம் முதலியன நீங்கும். கண்குளிர்ச்சியா யிருக்கும்.

---

வாகீஸ்வரி அச்சு நிலையம், சென்னை:—3 - 6 - 48.